பக்கங்கள்: பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 21 | புதன்கிழமை | (04-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 47

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

### கிருஷாந்தி கொலை வழக்கு

## குற்றவாளிகளின் மரண தண்டனையை உயர் நீதிமன்றம் நேற்று உறுதி செய்தது

(கொழும்பு)

கைதடியைச் சேர்ந்த மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி உட்பட நால்வரைக் கொலை செய்தமை தொடர்பான வழக்கில் குற்றவாளிகளுக்கு மேல் நீதிமன்றம் விதித்த மரண தண்டனையை உயர் நீதிமன்றம் நேற்று உறுதி செய்துள்ளது.

இக் கொலை தொடர்பாக குற்றவாளிகளாகக் காணப்பட்ட ஐந்து பேருக்கும் எதிராக 18குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்றுவந்த விசாரணையை அடுத்து இந்த ஐவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இம் மரணதண்டனையை நீக்குமாறுகோரி மரணதண்டனைக்குள்ளா ஐந்து பேரும் தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்து மரணதண்டனையை உறுதி செய்துள்ளது.

சோமரட்ணா ராஜபக்ஷ, ஜே. என்.ஜெயசிங்கா, ஜீ.பி.பிரியதர்சன, பிரியங்க பெரேரா, டி.எம். ஜெயதிலகா ஆகிய ஐவருக்குமே மரண தண்டனை உறுதி செய்யப்பட்டுள்ளது.

1996ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் திகதி கைதடிக் கொலைச் சம்பவம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## எந்தத் தேர்தலையும் நடத்த தேர்தல் திணைக்களம் தயார்

### திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தல் ஒன்று அறிவிக்கப்படுமானால் அதனை நடத்துவதற்கும் தாம் தயாராக இருப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது. அதேவேளை மாகாண சபைத் தேர்தலுக்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்திருக்கிறார்.

மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றால் அதனையும் நடத்த தயார் என்று தெரிவித்த அவர் சில வேளைகளில் மாகாண சபைத் தேர்தல்களும், பாராளுமன்றத் தேர்தல்களும் ஒரே தினத்தில் நடைபெற்றால்கூட அதனையும் எதிர்நோக்க தேர்தல் திணைக்களம் தயார் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அவ்வாறான தேர்தல் அறிவிக்கப்பட்டால் தற்போது தேர்தலுக்கு பயன்படுத்தப்படுகின்ற அதிகாரிகளையும் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையையும் அதிகரிக்க வேண்டி ஏற்படும். அத்துடன் வாக்களிப்பு மத்திய நிலையங்களிலும் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார். (த)

### இலங்கையின் 56ஆவது சுதந்திரதினம்

## தமிழர் தாயகப் பிரதேசத்தில் இன்று துக்க தினம்–பகிஷ்கரிப்பு

### குடாநாடு முழு அளவில் ஸ்தம்பிக்கும்

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் 56ஆவது சுதந்திரதினத்தை இன்று தமிழ் பேசும் மக்கள் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் துக்கதினமாக அனுஷ்டிக்கவுள்ளனர்.**

**தமிழர் தாயகத்திலுள்ள பல்வேறு பொது ஜன அமைப்புக்களின் ஏற்பாட்டில் இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளதுடன் உண்ணா விரதப் போராட்டங்களையும் நடத்தவுள்ளனர்.**

இலங்கையின் 56ஆவது சுதந்திர தினத்தை தென்னிலங்கையில் சிங்கள மக்கள் கோலாகலமாக கொண்டாடுமதேவேளை தமிழர் தாயகப் பிரதேசங்களில் தமிழ் மக்கள் துக்கதினமாக அனுஷ்டிக்கவுள்ளதுடன் அரசு ஏற்பாடு செய்துள்ள சுதந்திரதின வைபவங்களையும் பகிஷ்கரிக்கவுள்ளனர்.

இலங்கையின் சுதந்திரதினம் தமிழர் தாயகப் பிரதேச மக்களின் சுதந்திரதினமல்ல என்ற கோஷத்துடன் தமிழர் தாயகத்தில் உள்ள அனைத்துப் பொது அமைப்புக்கள் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் தனியார் கல்வி நிறுவனங்கள் பாடசாலைகள் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் ஒன்றுபட்டு சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்கவுள்ளனர்.

இன்று அனுஷ்டிக்கப்படும் துக்க தினத்தையடுத்து தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் தனியார் போக்குவரத்து சேவைகள் யாவும் ஸ்தம்பிதமடையவுள்ளன.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் வழக்கு விசாரணை

(யாழ்ப்பாணம்)

ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றில் நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது.

மேற்படி படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்த பாலச்சந்திரன் உதயபாலன் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 17ஆந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (த-3)

## உழவு இயந்திரம் மோதி சிறுவன் பரிதாப மரணம்

(கொழும்புத்துறை)

உழவு இயந்திரம் மோதியதில் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்றுக் காலை 7.00 மணியளவில் கொழும்புத்துறை விதானையார் வீதியில் இடம்பெற்றுள்ளது.

பாடசாலைக்கு செல்வதற்காக ஆயத்தமான சிறுவன் அருகில் உள்ள கடை ஒன்றிற்குச் சென்ற வேளை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது கொழும்புத்துறை இந்துமகா வித்தியாலய மாணவனான பூலோகராசா ஜேம்ஸ் (வயது 11) என்பவரே மரணமானவராவார்.

இவரை மோதிய உழவுஇயந்திரம் தப்பிச்சென்றுள்ளது. எனினும் உழவு இயந்திரத்தின் இலக்கம் பொதுமக்களால் பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸார் சாரதியைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சடலம் மரணவிசாரணையின் பொருட்டு நேற்று மதியம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ச-51,3)

## தமிழீழக் காவல் துறையுடன் தமிழ்ப் பொலிஸார் இணையலாம்

(கிளிநொச்சி)

இலங்கைப் பொலிசில் கடமையாற்றும் தமிழ்ப்பொலிஸ் அதிகாரிகள் தமிழீழ காவல் துறையில் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும். இவ்வாறு தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைப் பொலிஸார் தமழீழ காவல்துறையின் சட்ட திட்டங்களைப் பின்பற்றினால் சிங்கள மக்களுக்கு சிறந்த சேவையாற்ற முடியும்.

நாம் காவல்துறையை ஆரம்பித்த போது சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் அனைவரும் புதியவர்கள். இதனால் அவர்களுக்கு சமூக விடுதலை,தேசவிடுதலை, தொடர்பாக வகுப்புக்களையும் பயிற்சிகளையும் வழங்கினோம்.

இன்று சிறந்த அனுபவத்துடன் ஒரு பெரும் கட்டமைப்பாக எமது காவல்துறை விளங்குகிறது.

இந்நிலையில் எமது கட்டமைப்புடன் இணைந்து செயற்பட இலங்கைத் தமிழ் பொலிஸார் எந்நேரமும் தம்முடன் இணைந்து கொள்ளமுடியும் என்று நடேசன் கூறினார். (இ)

## எந்தநேரத்திலும் பாராளுமன்றம் ஜனாதிபதியால் கலைக்கப்படலாம்

### கொழும்பு அரசியலில் பரபரப்பு

(கொழும்பு)

எந்தநேரமும் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்று ஜனாதிபதியின் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதனை உறுதிசெய்யும் வகையில் ஜனாதிபதியின் நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக கொழும்புத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நேற்றுமுன் தினம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்சிப் பிரமுகர்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மேலும் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி ஈ.பி.டி.பியினரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்.

இதன் போது தேர்தலை நடத்த முடிவு செய்திருப்பதாகவும் பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதா

(10ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை ஆணையாளர் இளங்குமரனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

பரீட்சை ஆணையாளர் நாயகம் டபிள்யு.ஏ.விஜயசிறி தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரனை நேற்று முன்தினம் கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

சுமார் இரு மணி நேரம் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தைகளின் போது கல்விசார் குறைபாடுகள் தொடர்பாகவும், மாணவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை வன்னி மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களையும் பரீட்சை ஆணையாளர் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்புக்களில் பரீட்சை ஆணையாளருடன் பிரதிப் பரீட்சை ஆணையாளர் போல் அன்ரனி, முன்னாள் பிரதி பரீட்சை ஆணையாளர் குலதுங்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (த)

## வான் சாரதிக்கு கொலை மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

பொலிஸாரின் கொலை அச்சுறுத்தல் குறித்து வான்சாரதி ஒருவர் யாழ்.மனிதவுரிமை ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளார்.

கொழும்பு-யாழ்ப்பாணம் பயணிகள் சேவையில் ஈடுபடும் வான் சாரதியான கதிரேசன் ஜெயகாந்தன் (வயது 23) என்பவரே இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளார்.

2001ம் ஆண்டு அனுராதபுரத்

(10ஆம் பக்கம் பார்க்க)

### உயர் பாதுகாப்பு வலயங்களைப் பார்வையிட

## ஐ.நா.மனிதவுரிமை ஆணையாளர் இம் மாதம் யாழ்.வருகிறார்

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பார்வையிடுவதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இம்மாத நடுப்பகுதிக்குள் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழப்பாணத்தில் உள்ள அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு 400 க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இது பற்றி சம்பந்தப்பட்டவர்களுடன் விசாரணைகளை நடத்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அறிக்கை ஒன்றை இலங்கை அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததுடன் இது தொடர்பாக நேரில் சென்று நிலைமைகளை ஆராயுமாறு ஐக்கிய நாடுகள் சபையின்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மருத்துவப் பிரிவில் பிரபாவின் உத்தி

# உலகில் எவருக்குமே புரியாத புதிர்

## புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் உரை

(கிளிநொச்சி)

**தாயக விடுதலைப் போராட்டத்தில் பயன்படுத்தப்பட்ட போர் உத்திகளில் மருத்துவப் பிரிவில் தமிழீழ தேசியத் தலைவர் பயன்படுத்திய உத்தி இதுவரைக்கும் எவருக்கும் புரியாதபடி தனித்துவமானது என விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.**

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி இரண்டாம் திகதி கிளிநொச்சி, பரந்தன் உள்ளிட்ட இலங்கைப் படைத்தள தொகுதி மீது நடாத்தப்பட்ட பெரும் தாக்குதலில் இலங்கைப் படையினரின் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிய போராளிகளில் மேஜர் திவாகர், மேஜர் எஸ்தர் உட்பட ஒன்பது மருத்துவப் பிரிவு போராளிகளின் 6 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன் தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிறப்புரையாற்றும் போதே வே.பாலகுமாரன் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மருத்துவப்பிரிவின் 'யாழ்வேள்' மருத்துவமனையில் மேஜர் திவாகர், மேஜர் எஸ்தர், மேஜர் ரோகிணி, மேஜர் சுசில், லெப். அன்பனா, வீரவேங்கை குயில்மொழி, வீரவேங்கை வேணி, வீரவேங்கை விடுதலை, வீரவேங்கை ராகுலன் ஆகிய மருத்துவப் போராளிகளாக இருந்து வீரச்சாவைத் தழுவிய மாவீரர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்ட பந்தலில் பொதுச்சுடரை புலிகளின் குரல் பொறுப்பாளர் ந. தமிழன்பன் ஏற்றி வைத்தார். மருத்துவப்பிரிவு மருந்துக்களஞ்சிய பொறுப்பாளர் மனோஜ் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

அதனைத்தொடர்ந்து புலிகளின் குரல் போராளி வெற்றிச செல்வி தலைமையில் நடைபெற்ற அரங்க நிகழ்வில் மருத்துவப்பிரிவின் மாவீரர்களின் பணி தொடர்பாக போராளி மருத்துவர் அஜந்தன் உரை நிகழ்த்தினார். சிறப்புரையினை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் ஆற்றினார்.அவர் தொடர்ந்துரையாற்றுகையில்;

விடுதலைப் புலிகளின் போர் வெற்றிகளில் பயன்படுத்தப்பட்ட போராட்ட உத்திகளில் மருத்துவப் பிரிவில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பயன்படுத்திய உத்தி இதுவரை எவருக்கும் புரியாதபடி தனித்துவமானது.இன்று வரை இது எதிரிகள் உட்பட, உலகில் போர் நிபுணத்துவர்கள் எவருக்குமே புரியாத புதிர்தான். இதுவே போர் வெற்றிகளின் மூலாதாரம்.

கடந்த காலங்களில் லக்ஷ்மன் கதிர்காமர் உலக நாடுகள் எங்கும் சென்று தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக பொய்களை பரப்பி வந்தார். இன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் உலகம் முழுவதும் சென்று உண்மைத் தன்மைகளை தெரிவித்து தலைநகரத்துக்கு ஊடாக அவர்களின் பாதுகாப்புக்கு ஊடாகச் சென்று உரைத்து வருகின்ற வரலாற்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது இந்த விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்களின் தியாகத்தாலும் சிந்தப்பட்ட குருதி ஆற்றினாலும் கிடைத்த பெரும் பெறுபேறு. இன்று பேச்சுவார்த்தை மேசையில் தமக்குரிய கதிரைகளில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து அமர்ந்திருக்கிறார்கள். அரச தரப்பு கதிரைகளில் ஆட்கள் இல்லை. யார் இருப்பது என்று அவர்கள் குழம்பி இருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்கு உரிமைகளை கொடுக்காமல் பேச்சுக்களையும் நடாத்தாமல் சமாதானம் என்ற பெயரில் வெறுமனே காலத்தை நீட்டிக்கும் முயற்சியிலேயே அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இந்த நிலைமை இப்படி எத்தனை நாட்களுக்கு தொடரும் எனவும் வே.பாலகுமாரன் கேள்வியெழுப்பினார். இந்த நிகழ்வில் போராளிக் கலைஞர்களின் நடனங்கள், கவிதைகள் பெண்கள் இசைக்குழுவினரின் எழுச்சி இசை நிகழ்ச்சி என்பனவும் இடம்பெற்றன. (த)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு பொலிஸார் சிரமதானம்

இலங்கையின் 56வது சுதந்திர தினத்தை முன்னிட்டு வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் இன்று பொலிஸார் சிரமதானம் மேற்கொள்ளவுள்ளார்.

இச்சிரமதானப் பணியில் பொது நிறுவனங்களையும்,பொதுமக்களையும் ஈடுபடுமாறு வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அழைப்பு விடுத்துள்ளார். (த-89)

## மகாகும்பாபிஷேகம்

நீராவியடி அருள்மிகு ஸ்ரீஜெய வீரகத்தி விநாயகர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 9.45 முதல் 10.40 வரையிலான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 7 மணிமுதல் 3 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். (ச-49)

## வியாழக்கிழமை கடை திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

விடுமுறை தினமான நாளை வியாழக்கிழமை கடைகளைத் திறந்து வியாபாரம் செய்யுமாறு வணிகர் கழகம் சகல வர்த்தகர்களுக்கும் அறிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வணிகர் கழகத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமையவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (தி)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் 41 வேலைத்திட்டங்கள் பூர்த்தி

### வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலர் கே.வெங்கடாசலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை, 21 இலட்ச ரூபா பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதிமூலம் 41 பிரதேச வேலைத் திட்டங்களை பூரணமாக நிறைவு செய்துள்ளதாக சபையின் செயலாளர் கே.வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

கட்டட நிர்மாணம், புனரமைப்பு, சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளுக்குத் தளபாடங்கள் வழங்கப்பட்டமை, வீதிகள் செப்பனிடல் மற்றும் பிரதேச புனரமைப்பு வேலைகளுக்கே இந்நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கோப்பாய் பூதர் மடம் வீதி, உரும்பிராய் இந்துக் கல்லூரி வீதி, கோப்பாய் மகிழடி விநாயகர் வீதி, ஆவரங்கால் வெள்ளவாய்க்கால் போன்ற வீதிகள் செப்பனிடப்பட்டதுடன் அச்சுவேலி முடக்கன் மயானம், நீர்வேலி சியக்காடு மதகு ஆகியனவும் புனரமைக்கப்பட்டதாகவும், 27 முன்பள்ளிகள், சனசமூக நிலையங்களுக்குத் தளபாடங்கள் வழங்கப்பட்டதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் கோப்பாய் கண்ணகை அம்பாள் சனசமூக நிலையத்திற்கு 2 இலட்சம் ரூபாவும், வாதரவத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு 2இலட்சம் ரூபாவும், ஆவரங்கால் கலையகம், இருபாலை கதிரொளி ஆகிவற்றுக்குத் தலா 50 ஆயிரம் ரூபாவும்,அச்செழு வேவியாபுரத்திற்கு 97 ஆயிரம் ரூபாவும் கட்ட நிர்மாண புனரமைப்பு நிதியாக வழங்கப்பட்டதாகவும் செயலாளர் வெங்கடாசலம் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை பிரதேச அபிவிருத்திப் புனரமைப்பு வேலைத் திட்டங்கள் பலவற்றை நிறைவு செய்வதற்கு நிதியில்லாமல் இருப்பதாகவும், இது குறித்து பொது மக்கள் பல கோரிக்கைகளை முன் வைத்திருப்பதாகவும் செயலாளர் தெரிவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# மாகாணசபைத் தேர்தல் கூட்டம்

# அரசியல் யாப்புக்குட்பட்டது

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் அரசியல் யாப்பிற்குட்பட்டதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதனை சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா பாராளுமன்றில் நேற்று அறிவித்தார்.

இதனையடுத்து மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தை அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல். பீரிஸ் பாராளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றினார். ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தல்களையும் ஒரேதினத்தில் நடத்துதல், அதுவும் அதனைச் சனிக்கிழமை நடத்துதல் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் இருப்பது ஆகிய மூன்று முக்கிய விடயங்களும், மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனா அங்கு உரையாற்றுகையில், தற்போதைய சட்டதிட்டங்களுக்கமையவும் சனத் தொகை அதிகரிப்புக்கேற்பவும் மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை கூட்டப்பட வேண்டும்.

ஆனால் அதனை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் இருப்பதற்கு தேர்தல் சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவைதவிர வடக்குக் கிழக்கை இலக்காக வைத்து மாகாண சபை என்ற முறை உருவாக்கப்பட்ட போதும் 1991 ஆம் ஆண்டின் பின்னர் அங்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றிருக்கவில்லையென்றும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார். (தி-60,10)

## கட்டடத் திறப்புவிழா

(பொன்னாலை)

அராலி மேற்கு நொச்சியம்பதி சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா நாளை 5ம் திகதி நிலையத் தலைவர் எஸ்.மகேந்திரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ச-49)

## சட்டத்தரணி வீட்டில் திருட்டு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மூளாய் வீதியில் உள்ள சட்டத்தரணி ஒருவரின் வீடு உடைக்கப்பட்டு ஆயிரக் கணக்கானரூபா பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளது.

சட்டத்தரணி வீட்டில் இல்லாத சமயம்பார்த்து வீடுபுகுந்த திருடர்கள் இத்துணிகரக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாகக் கைரேகைகள் பதிவுசெய்யப்பட்டதுடன் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-89)






பொஷ் நிறுவனத்தினரின் வழிகாட்டலில் யாழ்.மத்தியகல்லூரியில் நடைபெற்ற அழகுக் கலைக் கண்காட்சியை யாழ்.மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திறந்து வைப்பதையும் அழகுக் கலையில் பங்குபற்றித் தெரிவு செய்யப்பட்டவர்களையும் படத்தில் காணலாம். படங்கள்:ப.தேவா.

### ஈரான் பாராளுமன்றத்தில் அங்கம்வகிக்கும்

# சீர்திருத்தவாதிகளுக்கு தடை!

## 120 எம்பிக்கள் ராஜினாமா!

(தெஹறான்)

ஈரான் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சீர்திருத்தவாதிகள் நூற்று இருபது பேர் இராஜினாமாச் செய்ததை அடுத்து எழுந்துள்ள சிக்கல்களைத் தீப்பதற்கு அந்த நாட்டின் ஆன்மீகத்தலைவ் ஆய்துல்லா அலிகொமெய்னி தலையிட வேண்டுமென அந் நாட்டுஅரசு வேண்டுகோள விடுத்துள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளு மன்றத்தேர்தலில போட்டியிடவிருந்த சீர்திருத்தவாதிகள் மூவாயிரம் பேருக்கு ஈரானின் பாதுகாப்புப்பேரவை தடைவிதித்துள்ளதால் இந்தத் தேர்தலகளைப பிற் போடுமாறு ஈரானின் சீர்திருத்தவாதிகள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஈரானில் நடைபெறவுள்ள தேர்தல்களில் சீர்திருத்தவாதிகள் போடடியிடுவதற்கு முட்டுக்கட்டை போடுமுகமாகவே, அந்த நாட்டின் கடும்போக்குடைய பாதுகாபபு பேரவை இவ்வாறு தடை விதித்தது.

இதைஅடுத்து அந்த நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நூற்றியிருபது பேர் தமது இராஜினாமாவை இருதினங்களுக்கு முன்கையளித்தனர்.

பாதுகாப்புப்பேரவையின் தீமானத்தை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவிக்கும் சீர்திருத்தவாதிகள் தேர்தலகளைப் பிற்போடுமாறு அரசாங்கத்தைக்கோருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம பாராளுமன்றத்தில் உரையாற்றிய சபாநாயகர் பாதுகாப்புப் பேரவைக்கும் சீர்திருத்தவாதிகளுக்கும் இடையே உள்ள சிக்கலைத் தீப்பதற்குஈரானின் ஆன்மீகத்தலைவர் ஆய்துல்லா அலிகொமெய்னி முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஈரானின் பாதுகாப்புப் பேரவையானது ஆய்துல்லா அலிக் கொமெய்னியால் நியமிக்கப்படும் 6பேரையும் அந்நாட்டின் சட்டவாக்க சபையால் முன்மொழியப்படும 6பேரையும் கொண்டதாக அமைந்தது.

ஈரானின் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் அனைத்துச் சட்டங்களும், இந்தப் பாதுகாப்புப் பேரவையின் அங்கீகாரத்தின் பின்னரே அமுலுக்கு வருகின்றது.

இதன் காரணமாகவே இந்தச் சிக்கலைத் தீர்க்குமாறு ஆன்மீகத் தலைவரிடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிககபபடுகிறது.

(யே-9)



ஞாயிற்றுக்கிழமை சவூதி அரேபியாவில் ஹஜ் யாத்திரை நெரிசலில் சிக்கி காயமடைந்தவரை சிகிச்சைக்கு, தூக்கிச் செல்லும் மீட்புப் படையினர்.

### உலக சுகாதார

## நிறுவனம் எச்சரிக்கை!

(நியூயோர்க்)

தென்கிழக்கு ஆசிய நாடுகளை அச்சுறுத்திவரும் பறவைக்காய்ச்சல்நோய் தற்போது மனிதர்களிடத்தில் இருந்து மனிதர்களுக்கும் பரவத தொடங்கி விட்டதாக உலக சுகாதார அமைப்பு சந்தேகம் தெரிவித்துள்ளது.

கோழிகள் போன்ற பறவைகளிடம் இருந்து மனிதர்களுக்குப் பரவி வரும் பறவைக்காய்சல் நோய் 10 ற்கும் மேற்பட்ட தென்கிழக்காசிய நாடுகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கி வருகிறது. இந்த நோய்க்கு இது வரை 11 பேர் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் வியட்நாமில் சில தினங்களுக்கு முன் உயிரிழந்த 2 சகோதரிகளுக்கு இந்நோயால் உயிரிழந்த அவர்களது சகோதரனிடமிருந்து நோய் தொற்றியிருக்கக்கூடுமென்று உலக சுகாதார அமைப்பின் செய்தித் தொடர்பாளர் "வாப்வைத்" சந்தேகம் தெரிவித்துள்ளார்.

மனிதர்களிடம் இருந்து மனிதர்களுக்கு இந்நோய் பரவினால் அது சார்ஸை விட மிகவும் கொடிய நோயாக உருவெடுத்து விடும் என்றும் உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. (யே-09)

## 2005க்கான புஷ்ஷின் வரவு செலவுத் திட்டம்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட யோசனைகளை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் காங்கிரஸ் சபையில் முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்காவின் 2005 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் 7 ஆயிரத்து 486 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்தொகையில் அமெரிக்காவின் பாதுகாப்புச் செலவினங்களாக இதில் 10 வீதமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஈராக், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் மேற்கொள்ளப்படவுள்ள இராணுவ நடவடிக்கைகளுக்காக 400 பில்லியன் அமெரிக்க டொலர்கள் ஒதுககப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாண்டின் நவம்பர் மாதம் அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளவுள்ள புஷ் அதிகூடிய பெறுமதியுள்ள வரவு செலவுத் திட்டமாக இது அமையும்.

(யே-09)

### 20 பேர் பலி

### 30 பேருக்குக் காயம்

(லூஸாகா)

ஸாம்பியாவில் இடம்பெற்ற பஸ் விபத்தில் நேற்று முன்தினம் 20 பயணிகள் உயிரிழந்ததோடு 30 பேர் காயமடைந்துள்ளனர்.

ஸாம்பியா வடபகுதியில் உள்ள பிரதான வீதியில் வேகமாகச் சென்ற மினிபஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்ததிலேயே இந்தவிபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த நபர்கள் ஸாம்பிய வைத் தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்கள். (யே-09)



பெங்களூரில் கடந்தஞாயிற்றுக்கிழமை தெரு நாய்களைத் தத்தெடுத்துக்கொண்ட பெண்கள். குபா என்ற சமூக சேவை நிறுவனம் இந்நிகழ்ச்சியை நடத்தியது.


## எல்லைப் பகுதியில் எல்.கே.அத்வானி

(புதுடில்லி)

ஜம்மு காஷ்மீரில் இந்தியபாகிஸ்தான் எல்லைப் பகுதியில் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னர் பயங்கரவாதிகள் செயற்பாடுகள் குறித்த நிலைமை பற்றி ஆய்வு செய்வதற்காக துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி நேற்று எல்லைப் பகுதிக்குச் சென்றார்.

ரஜோதி, பூஞ்ச் பகுதிகளில் இந்திய இராணுவம் மேற்கொண்டு வரும் பாதுகாப்பு வேலி அமைக்கும் பணியையும் துணைப்பிரதமர் பார்வையிட்டார்.

பின்னர் அத்வானி இராணுவ, மற்றும் பிற துறைகளின் உயர்அதிகாரிகளுடன் பாதுகாப்பு, தீவிர வாதிகள் ஊடுருவல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆய்வு நடத்தினார். (யே-9)



சவூதி அரேபியாவின் மினா நகரில் திங்கள்கிழமை 2வது நாளாக நடந்த, சாத்தானின் மீது கல்லெறியும் சடங்கின்போது, தூண்களின் மீது கல்லெறிகின்றனர் ஹஜ் யாத்ரிகர்கள். ஞாயிற்றுக்கிழமை நடந்த துயரச் சம்பவத்தை அடுத்து, மிகுந்த எச்சரிக்கையுடன் கல்லெறியும் யாத்ரிகர்கள்.

# ஐ.நா.செயலர் அனான் ஜோர்ஜ் புஷ் சந்திப்பு

ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ்ஷை நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

ஈராக்கில் நடைபெற்ற அமெரிக்க யுத்த ஆயுத தேடுதல் தொடர்பாக நியமிக்கப்படவுள்ள சுதந்திர விசாரணை ஆணைக் குழுவிற்கு தலைமை தாங்குமாறு அமெரிக்கா சார்ந்த வட்டாரங்கள் கோபி அனானைச் கேட்டுக் கொணடதையடுத்து இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தல்கள் தொடர்பாகவும் அவை நடத்தப்படும் முறைகள் தொடர்பாகவும் இச்சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டதென ஐ.நா.சபையின் ஆலோசகர் கொண டலீசாறைஸ் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் ராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் மற்றும் காங்கிரஸ் சபையின் உறுப்பினர்கள் போன்றோரைச் சந்தித்து பேசியுள்ளார். (யே-9)

## வைரஸ் அமெரிக்காவைத் தாக்கியது! கணனி நிபுணர்கள் எச்சரிக்கை !

(வாஷிங்டன்)

உலகில் தீவிரமாகப் பரவிவரும் மைடோன் எனப்படும் கணனி வைரஸின் தாக்கங்களைக் குறைத்துக் கொள்வதற்காக அறியப்படாத முகவரிகளில் இருந்து அனுப்பப்படும் ஈமெயில்களை பார்வையிடவேண்டாம் என கணனி நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்காவில் இயங்கிவரும் எஸ்.சி.ஓ. எனப்படும் கணனி நிறுவனத்தின் இணையத் தளங்களை இந்த மைடோன் எனப்படும் வைரஸ் செயலிழக்கச் செய்துள்ளது.

இதனால் எஸ்.சி.ஓ., மைக்ரோசொப்ட் ஆகிய நிறுவனங்கள் இந்த வைரஸை உருவாக்கிய நபர் குறித்த தகவல்களைத் தருபவர்களுக்கு 2 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களைச் சன்மானமாக வழங்குவதாக அறிவித்துள்ளன.

நோர்வேக் அல்லது ஷிங்ஹவி என பல்வேறு பெயர்களினால் அழைக்கப்படும் இந்த வைரஸ் கடந்த திங்கட்கிழமை முதல் ஈமெயில்கள் மூலமாக இணையத் தளங்களுக்குச்செலுத்தப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும்12ஆம் திகதி வரை ஆயுட்காலத்தைக் கொண்டுள்ள இந்த வைரஸ் இணையத்தள மூடாகப் பரவும்,

இதனால் அறியப்படாத முகவரிகளில் இருந்துவரும் ஈமெயிலகளைப் பார்வையிட வேண்டாமென கணனி நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

இவ்வாறான வைரஸ்கள் எழுநதமான தன்மையுடைய முகவரிகளில் இருந்து சிட்வட்.சி.எம்.ரி., ஈ.எஸ்.சி.பி.ஐ.எவ் அல்லது எஸ்.சி.ஆர் போன்ற பெயர்களில் நிலை பெறுவதாக அமையும் வண்ணம் அனுபப்படுகின்றது.

இந்த வைரஸின் தாக்கத்தினால் இதுவரை 26.1பில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதார நஷ்டம் ஏற்பட்டுளளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (யே.9)

## இன்று ஒரு தகவல்

# அணுக்கதிர் எழுத்து

சிலரது கையெழுத்து உருண்டையாக பெரிய எழுத்தாக இருக்கும் சுலபமாகப் பார்த்துப் படித்துவிடலாம். சிலரது கையெழுத்து கடுகளவில் இருக்கும். லென்ஸ் வைத்துத் தான் படிக்கவேண்டும்.

எனக்கு ஒருவர் கடிதம் போட்டிருந்தார். நான்கு பக்கத்தில் எழுதவேண்டிய ஒரு சிறுகதையை அஞ்சல் அட்டையில் அடக்கி அனுப்பிவைத்தார். நான்கு நாட்கள் முயற்சித்து அதைப் படிக்க வேண்டியதாகிவிட்டது.

இப்படிப் பொடிப்பொடியாக எழுதுபவர்கள் நமது ஊரில் நிறையப் பேர் உள்ளனர். இவர்கள் எல்லோரும் அசந்து போகும் அளவிற்கு புதிதாக ஒரு எழுத்து முறையைக கணடுபிடித்துள்ளனா். ஒரு குண்டுசி முனையில் எவ்வளவு வார்த்தை எழுதமுடியும் என்று நினைக்கின்றீர்கள்? சுமாராக 150கோடி வார்த்தைகளை எழுதலாம் என்கிறார் மைக்பிளென் என்னும் ஓர் இங்கிலாந்து விஞ்ஞானி.

இவர் சமீபத்தில் ஒரு வாழ்த்து அட்டையை தயார் செய்தாராம் அதன் அளவு 5சதுர மைக்ரோ மீற்றராம். மைக்ரோ மீற்றர் என்றால் எவ்வளவு என்று நினைக்கின்றீர்கள்? ஒரு மில்லிமீற்றர் எவ்வளவு என்று நமக்குத்தெரியும். ஒரு மில்லி மீற்றரில் ஆயிரத்தில் ஒரு பங்குதான் ஒரு மைக்ரோ மீற்றர் இதுபோல் 5பங்கு நீளம் 5பங்கு அகலம் அதுதான் அட்டையின் அளவு. அதைக் கண்ணால் பார்ப்பதே கஷ்டம். அந்த அட்டையில் எழுதப்பட்ட எழுத்தின் அளவு என்ன தெரியுமா? நாலு சதுர நானா மீற்றர். அது என்ன நானா மீற்றர்? ஒரு மைக்ரோ மீற்றரில் ஆயிரத்தில் ஒரு பங்கு அதாவது ஒரு மில்லி மீற்றர் பத்து இலட்சத்தில் ஒரு பங்கு.

அதுசரி! இந்த அளவில் ஒரு எழுத்தை எப்படி எழுதுகின்றனர்? அணுக்கதிரைப் பயன்படுத்தி இதை எழுதுகின்றனர். அதனால் இதற்குப் பெயர் அணுக்கதிர் அளவு எழுத்துமுறை! சரி... எழுதுகின்றனர். அதை படிப்பது எப்படி?

எலெட்ரோன் மைக்ரோஸ்கோப் மூலம் தான் படிக்க வேண்டும். 1970ல் **Scanning Electron Microscope** ஐக் கண்டு பிடித்தார்கள். அதன் பின்பு 1975ல் **Holographic Electron Microcope** ஐக் கண்டுபிடித்தார்கள். இது அடுக்கு மைக்ரோஸ்கோப். இதன் மூலமாக 20 நானா மீற்றர் கனமுள்ள எழுத்துக்களைப் பார்க்க முடியும். இதை விட சிறிய அளவு எழுத்துக்களைப் பார்க்கக் கூடிய மைகரோஸ்கோப்பை இப்போது கண்டுபிடித்துவிட்டனர். அணுத்தூளைக் கூட இதன் வழியாகத் தெளிவாகப் பார்க்க முடியுமாம்.

இந்த மைக்ரோஸ்கோப்பைக் கண்டுபிடித்தன் பின்பு தான் நாலு சதுர நானா மீற்றர் அளவுள்ள எழுத்துக்களை எழுத்து அணுக்கதிர் எழுத்துமுறையை மைக்பிளென் உருவாக்கி இருக்கின்றார். இந்த எழுத்துக்களைப் படிக்கக்கூடிய நவீன மைக்ரோஸ்கோப் இன்று உலகிலேயே ஐந்துதான் இருக்கின்றதாம். இதை இப்போது "மைக்ரோ லித்தோகிராப் தொழில் நுட்பம்" என்று கூறுகின்றனர். கொஞ்சம் எழிமைப்படுத்திவிட்டால் இந்த உலகில் இருக்கின்ற எல்லாப் புத்தகங்களையும் ஒருசில சதுர மீற்றர் பரப்பிற்குள் அடக்கிவிடலாம் என்கின்றனர்.

இந்தப் புதிய தொழில்நுட்பம் கல்வித்துறையில் ஒருபெரிய புரட்சியையே உண்டாக்கிவிடும் போலத் தெரிகிறது. ஏற்கனவே நமது ஊரில் அரிசியில் திருக்குறள் எழுதுவது, படம் வரைவது, முட்டை ஓட்டுக்குள் ஓவியம் தீட்டுவது போன்ற பழக்கங்கள் எல்லாம் உண்டு.

ஐரோப்பாவில் 17ஆம் நூற்றாண்டிலேயே ஒரு நாணயத்தின் சிறு பகுதிக்குள் பிரார்த்தனை வாசகம் 10க் கட்டளைகள் எல்லாம் எழுதியிருக்கிறார்கள். இந்தப் பிரார்த்தனை வாசகங்களை ஒருவர் சதுர மில்லிமீற்றர் பரப்பில் எழுதி கின்னஸ் சாதனை செய்திருக்கின்றார்.

நமது ஆள் ஒருவர் எப்போதும் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதைதான். படிப்பார். எந்தப் புத்தகமாக இருந்தாலும் எழுத்துத் தரத்தைப் பார்த்து வாங்குவதில்லை. எழுத்தின் அளவைப்பார்த்துத்தான் வாங்குவார். அவரிடம் அரிசியில் திருக்குறளை எழுதிக கொண்டு வந்த ஒருவர் அவர் முன் இருந்த மேசையில் வைத்து "இந்த அரிசியில் என்ன திருக்குறள் எழுதியிருக்கிறது என்று கண்டுபிடிக்க முடியுமா?" என்று சவால் விட்டார்.

அவர் உடனே ஒரு பெரிய லென்ஸ்சைக் கையில் எடுத்தார். அதைக் கண்ணில் வைத்துக்கொண்டு குனிந்து அதைக் கவனித்தார். சிறிதுநேரம் சென்றது "என்ன சார்... குறள் என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லையா? என்றார் இவர். "நான் குறளைத் தேடவில்லை அரிசி எங்கே என்று தேடுகிறேன் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்

# இன்று உண்ணா விரதப் போராட்டம்

## விவசாயிகள் சம்மேளனம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு, தனங்கிளப்பு, மறவன் புலோ, கைதடி, நாவற்குழி வடக்கு ஆகிய பகுதி மக்களை மீளக்குடியமர அனுமதிக்குமாறுகோரி அப்பகுதி மக்கள் இன்று புதன்கிழமை தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாக உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

இது தொடர்பாக தென்மராட்சி விவசாயிகள் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில்,

கடந்த கால யுத்தம் காரணமாக எமது உறவுகள் சிதைக்கப்பட்டு எமது உடமைகள் குடியிருப்புக்கள் அனைத்தும் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டும், ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் இன்று நாம் ஏதிலிகளாக, நாடோடிகளாக திரியும் நாங்கள் மளக் குடியமரும் நோக்கோடு மனிதாபிமானத்தோடு செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கோரிக்கைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட நிலையில் இன்று புதன்கிழமை தொடக்கம் உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

எம்முடைய நிலமைகளை விளக்கி கடந்த மாதம் 06 ஆம் திகதி பிரதம மந்திரிக்கும், இராணுவ உயர் பீடங்களுக்கும் உரியவர்களுக்கும் அனுப்பிய செய்தி தொடர்பாக இதுவரை எந்த விதமான பதிலும் தராத பட்சத்தில், இலங்கையின் சுதந்திர தினம் எனப்படும் அந் நாளில் இவ் உண்ணா வரதப் போராட்டத்தை ஆரம்பிக்கிறோம்.

நாம் இதுவரை பொறுமையைக் கடைப்பிடித்ததன் காரணம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் எம் பிரதேசமும் விடுவிக்கப்பட்டு ஒப்பந்தத்தின் சரத்துகளுக்கு அமைவாக எமது குடியிருப்புக்கள், பாடசாலைகள், ஆலயங்கள், விவசாய விளைநிலங்கள் என்பன விடுவிக்கப்பட்டு கௌரவமாகவும் சுதந்திரமாகவும் வாழ முடியும் என எதிர்பார்த்தோம். புரிந்துணர்வு ஏற்பட்டு 2 ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலையிலும், எமது இடங்களைப் பார்வையிடக் கூட இராணுவம் அனுமதிக்கவில்லை. இராணுவத்தை நாம் கோரும் போது காலத்துக்குக் காலம் உறுதிமொழிகள் வழங்கப்பட்டு ஏமாற்றப்பட்டோம். இனியும் ஏமாற மாட்டோம்.

★5 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களும் 3ஆயிரம் ஏக்கர் மேட்டுநிலங்களும் தரிசு நிலங்களாகிவிட்டன.

★கடல்நீர் தடையின்றி பெருகி எமது பிரதேசம் உவர் நிலமாக மாறுகிறது.

★46 இந்துக் கோவில்கள் சிதைவடைந்து பராமரிப்பின்றி உள்ளன.

★2 பாடசாலைகளின் கல்விச் செயற்பாட்டுக்கு முற்றாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளன.

★3 கூட்டுறவுச் சங்ககிளைகளும் ஆதார வைத்தியசாலை ஒன்றும் செயற்படாமல் உள்ளது. எழுநூறு குடியிருப்பாளர்கள் நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## இராசிபலன்

**04.02. 2004**

**(தை 21, புதன்கிழமை)**

**திரயோதசி பிற்பகல் 01.19மணி வரை**
**புனர்பூசம் பின்னிரவு 01.47மணி வரை**
**இராகுகாலம் 12.35-02.05 மணிவரை**
**சுபநேரம் 05.05-06.35 மணிவரை**

**56வது சுதந்திர தினம்**

**மேடம்**
**சகோதரர் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும், இனிய சம்பவம், தொழில் நன்மை.**

**இடபம்**
**பித்த ரோகம், காரிய தாமதம், தொழில் கஷ்டம், மாதர் நட்பு.**

**மிதுனம**
**போசன நன்மை, நல்ல பிரயாசை, நண்பர்கள் சந்திப்பு, பிரயாணம்.**

**கடகம்**
**மனக்கிலேசம், காரிய சிந்தை, போசன சுகக் குறைவு, அபகீர்த்தி.**

**சிங்கம**
**நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, பொருள் சேர்க்கை, கீர்த்தி.**

**கன்னி**
**அதிக பிரயாசை, பிறர் உதவி, புதிய விடயம், கௌரவமான நிலை.**

**துலாம்**
**வீண் மனஸ்தாபம், எதிர்பாராத செலவு, காரிய தாமதம், சரீரப் பிரயாசை.**

**விருச்சிகம்**
**உறவினர் மனஸதாபம், பணத்தட்டுப்பாடு, முயற்சி தாமதம், சகோதரர் வழிநன்மை.**

**தனுசு**
**நல்ல வரவேற்பு, தொழிலில் ஆர்வம், கல்வி மேன்மை, முயற்சி கைகூடும்.**

**மகரம்**
**நண்பர்கள் சந்திப்பு, உடல் நலம், புதிய முயற்சி, தனவரவு.**

**கும்பம்**
**சொத்துக்களால் கவலை, கௌரவமான நிலை, காரிய சிந்தை, சிறு வியாதி.**

**மீனம்**
**மனச் சஞ்சலம், எடுத்த காரியம் தாமதமாகும், ரோக நிலை, தன வீரயம்**

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**
**- வளவன்.**

## தமிழ்ச்செல்வன் குழு சுவிற்சர்லாந்து பயணம்

(பேர்ளின்)

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான இக்குழுவினர் நோர்வேயில் இருந்து சுவிற்சர்லாந்துக்குச் சென்றுள்ளனர்.

அங்கு பேர்ளினில் உள்ள சுவிறசர்லாந்து வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் அமைச்சின் ஆலோசகரான சுலைமரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது, இலங்கையில் நிலைநாட்டப்பட வேண்டிய சமஷ்டி அரசியல் முறைமை குறித்தும், தமிழ மக்களின் தன்னாட்சி அதிகாரங்கள் கொண்ட அரசியல் அமைப்பு முறை பற்றியும் பிரஸ்தாபித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இக்குழுவினர் சுவிற்சர்லாந்தின் பாதுகாப்பு அமைச்சின் மனித உரிமைக்கான பிரதிநிதி கேஹஸ்ரன் கௌவா மற்றும் இந்நாட்டு வெளிவிவகார அமைச்சின் பிரதம தூதுவர் ஹோபோ ஆகியோரையும் சந்தித்துள்ளனர்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் குறித்தும், வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கான அவசர மனிதாபிமான தேவைகள் குறித்தும் இவர்களிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்தியுள்ளார். (தி-63,04)

## கான்ஸ்டபிள் சுட்டுக் கொலை துப்பாக்கியும் அபகரிப்பு

(வெலியத்தை)

பொலிஸ் கான்ஸ்டபிளைச் சுட்டுக்கொன்றவர்கள், அவர் வைத்திருந்த துப்பாக்கியையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

வெலியத்தைப் பிரதேசத்தில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் வெலியத்தை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ரிசேவ் பொலிஸ் காஸ்டபிள் ஒருவரே இவ்வாறு இனம் தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி பலியானவராவார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இச் சம்பவம்பற்றி தெரிவருவதாவது.

மோட்டார்சைக்கிள் ஒன்றில் வந்து கொண்டிருந்த சில நபர்களை வழி மறித்து சோதனையிட முற்பட்டவேளை, அவர்கள் நடத்திய திடீர் துப்பாக்கிப் பிரயோகத்திலேயே மேற்படி கான்ஸ்டபிள் பலியாகியுள்ளார்.

இவ்வாறு கானஸ்டபிளை சுட்டுக்கொன்ற குழுவினர் அவர் வசம் இருந்த ரி.56 ரக துப்பாக்கி ஒன்றையும் அபகரித்துச் சென்றிருப்பதாக வெலியத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (தி-60,4)

## நிதியமைச்சுக்கு முன்னால் விவசாயிகள் உண்ணாவிரதம்

(கொழும்பு)

வற் வரி மூலம் அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ள உரங்களின் விலையைக் குறைக்குமாறு கோரி எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் கொழும்பிலுள்ள நிதியமைச்சின் முன்பாக விவசாயிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

விவசாய உரவகைகளின் விலையைக் குறைக்குமாறு கோரி தற்போது நாட்டிலுள்ள 7 நகரங்களில் சுழற்சிமுறை உண்ணாவிரதப் போராட்டங்கள் நாடாத்தப்பட்டுவரும் நிலையில், இது விடயம் தொடர்பாக அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அரசாங்கம் இது விடயம் தொடர்பாக கடைப்பிடிக்கும் அசமந்தப் போக்கைக் கண்டித்தும், விவசாயிகள் மீது சுமத்தப்பட்டுள்ள உரங்களின் அதிகரித்த விலைப் பளுவைக் குறைக்கக் கோரியுமே எதிர்வரும் வெள்ளிக்கிழமை நிதியமைச்சின் முன்னால் விவசாயிகள் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தத் தீர்மானித்துள்ளனர். (தி-18)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
சி.பத்மநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

35

## முதலாம் பகுதி

### தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

· யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்குச் செல்வோரும், பூநகரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் போவோரும், துறைமுகத்தில் வாழ்ந்த மீனவரும் துறைமுக அதிகாரிக்கு வழமையான கட்டணங்களை இறுக்கவேண்டும். புடவைகள் யாவும் சுங்கவரித்துறையிற் பரிசோதனை செய்யப்பட்ட பின்பே அவற்றை அங்கிருந்து வெளியேற்றுவதற்கு அனுமதிகிடைக்கும். தனியார்களினாற் சுமந்து கொண்டு செல்லப்பட்ட ஒவ்வொரு பொதிக்கும் அரை மரக்கால் சுங்கவரியாகக் கொள்ளப்பட்டது. பிற துறைமுகங்களிலும் இதுவே வழமை போலும்.

பச்சிலைப்பள்ளிக் கடவைகளிற் சுங்கவரிகளைச் சேர்க்குந் தலங்கள் இருந்தன. அங்கு அதிகாரிகள் பரிசோதனை செய்தபின்பே கடவைகள் வழியாகப் பொருள்களைக் கொண்டு செல்லமுடியும். ஒரு கச்சை புடவைக்கும், 25அங்கவஸ்திரங்களுக்கும் அரைப்பணம் வரியாகக் கொள்ளப்பட்டது.

கண்டிப்பிரதேசங்களிலிருந்து வன்னிவழியாகத் தாவளங்களிலே வியாபாரிகள் குறிப்பிடத்தக்க அளவிற் பொருள்களை ஏற்றிச்சென்றனர். அதனாற் கடவைகள் மூலமாக அரசினருக்குக் கணிசமான வருவாய் கிடைத்தது. அபின், மஞ்சள், கராம்பு, மிளகு முதலிய பொருள்களுக்கு 8சதவீதம் வரியாகக் கொள்ளப்பட்டது. வன்னியூடாகக் கொண்டுபோன பொருள்களில் ஒரு பொதி எருதின் பருத்திச் சுமைக்கு அரைப்பணமும், 6 எருதுகளின் சமைப் பொதி வரகுக்கு ஒரு பணமும் வரியாகக் கொள்ளப்பட்டன. பச்சிலைப்பள்ளி, எழுதுமட்டுவாள் ஆகியவற்றில் உள்ள குடியானவர்கள் பூநகரி, வன்னி ஆகிய பகுதிகளுக்குப் போய் அங்குள்ள நிலங்களைச் செய்கை பண்ணுவது வழக்கம். அறுவடை முடித்துத் தானியங்களை எடுத்துச் செல்லும் போது அவரவர் இயல்புக்கேற்ப 10 முதல் 20 வரையான லாகம் தானியத்தைக் கடவுகளிலே இறைகடமையாகக் கொடுத்தனர்.

தமிழரசர் கால வழமைப்படி நாட்டிலே விற்பனையாகிய துணிகள் எல்லாம் அரச முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு இலச்சினை பதிக்கப்படாத துணிகளைத் துறைமுகங்கள் மூலமாகவுங் கடவைகள் வழியாகவுங் கொண்டு செல்வதற்கு அனுமதி கிடைப்பதில்லை. சீலைக்கு முத்திரையிடுவதற்கென வசூலிக்கப்பட்ட கூலி இலாஞ்சினைப்பேறு என்று தமிழகச் சாசனங்களிற் கூறப்படும். எட்டுச் சேலை, நான்கு கச்சி புடவை, இருபத்தைந்து சால்வை ஆகியவற்றுள் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பணம் இலாஞ்சினைப் பேறாகக் கொள்ளப்பட்டது. நெசவாளரின் வீடுகளிலும் பிறரது வீடுகளிலும் புடவைகளை விற்க முடியாது. அனுமதி பெற்றுக்கொண்ட குறிக்கப்பட்ட பொதுவிடங்களில் மட்டுமே புடவைகளை விற்பனை செய்ய முடியும். உணவு தானியங்களும் வேறு சரக்குகளும் இறக்குமதியாகுமிடத்தும் விற்பனையாகுமிடத்தும் அரசனின் பாகமாகக் கொள்ளப்பட்ட வரியே தரகு என்பதாகும். தமிழரசர் காலத்திற் பொருட்களை ஏற்றிவருகின்ற நாவாய்கள் துறைமுகத்தை அடையும் போது ஒவ்வொன்றும் ஒவ்வொரு பணம் தரகு இறுப்பது வழக்கம். தேசத்தின் பல்வேறு இடங்களில் உள்ள அங்காடிகளிலும் பட்டணத்திலும் தானியங்கள் விற்பனையாகுமிடத்து அவற்றைக் கொள்வோர் ஒவ்வொரு பணம் பெறுமதியான பொருளுக்கும் ஒவ்வொரு பிடி என்ற வகையாகத் தரகு கொடுத்தல் வேண்டும். நாட்டில் உற்பத்தியான பொருள்களையும் இறக்குமதியான பொருட்களையும் விற்பனை செய்வோர் ஒரு பொதுவிடத்திலே அரசினரின் சேவகர் முன்னிலையாக விற்பனை செய்யவேண்டும்.

### அடிக்குறிப்புகளும் விளக்கவுரைகளும்

1. The Temporal and Spiritual Conquest of Ceylon, Fernao de Queyroz, Trans. Father S.G.Perera, Colombo 1930 p. 51.
2. Rycklof Van Goens Further Instructions for the Commandeur Anthony Pavilioen Commandeur and Council of Jafnapatnam 1658 Memoirs and Instructions from the Governor General and Council of India Trans. Sophia Pieters, 1908, pp. 84 - 86.
3. பதினாறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே போர்த்துக்கேயர் படிப்படியாகத் தங்கள் மேலாதிக்கத்தை யாழ்ப்பாணத்தின் மீது ஏற்படுத்திக் கொண்டனர். பதினேழாம் நூற்றாண்டிலே இரண்டாம் சங்கிலிக்கெதிராகப் படையெடுத்துச் சென்று அவனைக் கைப்பற்றிவிட்டு நாட்டையும் கைப்பற்றிக் கொண்டனர். பிலிப் தே ஒலிவேரா (Philip De Oliveyra) என்ற தளகர்த்தனே அப்படையெடுப்புக்குத் தலைமைதாங்கினான்.
4. சூளவம்சம், 83:15-41.
5. Tri Sinhala Kadaim Saha Vitti, ed. Aw Marambe, Kandy, 1929, p.31; S.Paranavitana, "the Arya Kingdom in North Ceylon" Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society (JCBRAS), New Series, 7 (2), pp. 194 - 5.
6. C.Rasanayakam, Ancient Jaffna, Madras, 1926, p.338; Centamil IV, p.515.
7. S.pathmanathan, the Kingdom of Jaffna, pt.1, Colombo, 1978, p.150.
8. மேலது, ப.151. Inscriptions of the pudukottai State, Pudukottai, No. 366.
9. S.Pathmanathan, the Kingdom of Jaffna, pt. 1,pp.151 - 158.
10. சூளவம்சம், 90: 32.
11. மேலது, 90:43 - 47.
12. S.pathmanathan, the Kingdom of Jaffna, pt.1,p.160.
13. மேலது, ப.175.

## சிறுபான்மையினருக்கு சுதந்திரம்

## அரை நூற்றாண்டை தாண்டிவிட்டது

### ச.ச.நிலையங்களின் சமாசம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு சுதந்திரம் கிடையாது. அதுகிடைத்து அரைநூறாண்டைத் தாண்டி விட்டது. ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் சிறுபான்மை இனத்தைப் பிரித்தாளுகின்ற தந்திரோபாயத்தைப் பயன்படுத்தி பேதங்களை வளர்த்துக்கொண்டே செல்கின்றன.

இலங்கை அரசியல் யாப்பில் 29 சரத்தை நீக்கி புதிய ஜனநாயக சோசலிச குடியரசிற்கான பிரகடனத்தைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட அரசியல் அமைப்பில் சிறுபான்மையினருடைய நலன்கள் பேணப்படும் வகையில் அது அமைந்திருக்கவில்லை. அத்தோடு ஜே.ஆர்.ஜெவர்த்தன காலத்தில் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட யாப்பினை ஆக்கி அழித்த காரணத்தினால், பேரினவாதக் கட்சிகளே ஆப்பு இழுத்த குரங்கு போல் அவலப்படும் நிலமை தொடர்ந்தும் நீடித்து வருகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பின்பு கூட குறிப்பிட்ட யாப்பை திருத்துவதற்கு பேரினவாதக் கட்சிகள் எதுவும் முன்வரவில்லை.

இதேநேரத்தில் நிலைமையை மேலும் மோசமடையச் செய்யும் வகையில் இனவாத கூட்டணிகள் புதிதாகத் தோன்றி குட்டையை மேலும் குழப்பி விடுகினறன.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து சமாதானம் நிலவிய சுமார் 2 வருடகாலத்தில் அரசாங்கத்தா லேயே புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரிவர நிறைவேற்ற முடியாது போய் விட்டது.

அவசரகால நிலைமையின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்ந்து இருப்பது சட்டவலுவற்றதும் நதிக்குப் புறம்பானதும் ஆகும்.

எந்த வகையில் பார்த்தாலும் சமாதான முயற்சிக்கான கடைசி சந்தர்ப்பம் இதுதான் என்பதையும், இச்சந்தர்ப்பத்தை தவறிவிடடால், உலக நாடுகளில் இன்று உருவாகியிருக்கும் சார்பு நிலைத்தன்மையை மறுபடியும் உருவாக்குவது கஷ்டமாக இருக்கும். இச சூழ்நிலையைப் பயன்படுத்தி தமிழ்பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று நிற்கும் சிங்கள பொதுமக்கள் புத்தியீவிகளையும் இணைத்து ஒரு வெகுஜனப் போராட்டத்தை பேரினவாதத்திற்கு எதிராக உருவாக்க வேண்டியது அவசியமாகும். இந்நிலைமை உருவாகினால் அரசியல் அமைப்பை மாததிரமன்றி இனவாதிகளை ஓரங்கட்டவும் நாட்டில் நிரந்தர சமாதானததை ஏற்படுத்தவும் வழி பிறக்கும்.

ஆனால் தற்போதைக்கு 2 தசாப்தங்களுக்கு மேல் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் இலட்சக் கணக்கான குடும்பங்கள் தம சொந்த இடத்திற்கு செல்ல முடியாமல் தவிர்த்துக் கொண்டிருக்கின்றது. தம் சொந்த நிலத்தை இழந்து தவிக்கும் துன்பம்தான் கொடியது. இன்றும் பல்வேறு நெருக்கடிகள் நிலைத்து நிற்கின்றன. இந்த வரலாற்றுப் பின்னனியில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் சுதந்திரதினததைக் கொண்டாடவேண்டுமா? காலத்திற்குக் காலம் பகிஷ்கரிப்பு இடம் பெற்ற வரலாறுகள் உண்டு.

எமக்கு நிரந்தரமான சுதந்திரம் கிடைக்கும் வரை இலங்கையின் சுதந்திரதினத்தைப் பகிஷ்கரிப்பதோடு எமது சுதந்திரதிற்கான போராட்டத்திற்கு வலுச் சேர்த்து வெகுஜன மறியல் போராட்டங்களை உருவாக்கி சுதந்திர வேட்கையை உலகிற்குக் காண்பித்து சாமபோததான தண்டம் என்ற அடிப்படையில் செயற்படுவதற்கு அனைத்துப் பொதுமக்களும் பொது நிறுவனங்களும் எந்த விதமான வேற்றுமையும் இன்றி இப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்.

(தி)

## அத்துருகிரிய மிலேனியம் சிற்றி

## பாராளுமன்ற தெரிவுக் குழுவின்

## பெயர் விபரங்கள் வெளியீடு

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவக்களஞ்சியம் பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணை அறிக்கையை ஆராயும் பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகிப்போரின் பெயர் விபரங்கள் நேற்று பாராளுமன்றில் வெளியிடப்பட்டது.

அரசாங்கத்தின் சார்பில் நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி, காணிஅமைச்சர் ராஜித சேனாரத்ன, கப்பல்துறை மற்றும் துறைமுக அபிவருத்தி அமைச்சர் ரவூப்ஹக்கீம், வெளிவிவகாராங்களுக்கான உதவி அமைச்சர் லால் தர்மசிறிகமகே, கைத்தொழில் அமைச்சர் ரோகித போகல்லாகம, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோரின் பெயர் விபரங்களை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா வெளியிட்டார்.

இதேவேளை, இப் பெயர் விபரங்களை சபாநாயகர் பாராளுமன்றில் வெளியிட்ட போது, பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன ஒழுங்குப் பிரச்சினைகளைக் கிளப்பினார்.

சபாநாயகரினால் வெளியிடப்பட்ட பெயர் விபரங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பெயர் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றார்.

அதற்குப் பதிலளித்துப் பேசிய சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பெயர் விபரங்களை வெளியிடும பொறுப்பு தமக்கு இல்லை என்றும் அது எதிர்க்கட்சியினருக்கே உரியது என்றும் தெரிவித்தார்.

அதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த சமரசிங்க பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன் செனிவிரத்தின, றோகித அபயகுணவர்த்தன, மகிந்தானந்த அலுக்கமகே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சுனில் அன்ரி மெற்றி ஆகியோரின் பெயர்களைப் பிரேரித்தார்.

அதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் விசேட குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என சபாநாயகர் அறிவித்தார்.

(தி-60,10)

## திருடர் கைவரிசை

(இணுவில்)

வைத்தியசாலைக்குச் சென்று விட்டு வீடு திரும்பிய மூதாட்டியின் 3 பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை, முகவரி கேட்டு வந்த மோட்டார் சைக்கிள் திருடர்கள் அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அண்மையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் இணுவிலைச் சேர்ந்த சின்னப்பா இரத்தினம் என்பவரே சங்கிலியைப் பறிகொடுத்தார். இச்சம்பவம் தொடர்பாக சுன்னாகம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (தி-122)

# செய்தித் துளிகள்

## தமிழுக்குப்பரிசு

(தொல்புரம்)

தமது பிள்ளைகளுக்கு தமிழீல் பெயர் சூட்டுவோருக்கு ஊக்குவிப்புத் தொகை ஒன்றை வழங்கும் திட்டத்திணை ஈழத்தமிழா் நடாத்திவரும "சிலம்பம்" அமைப்பு ஏற்படுத்தியுள்ளது.

இங்கு இதன் முதல் அமா்வு எதிா்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.3.30மணிக்கு நல்லூா் நாவலா் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் தமிழ் அறிஞா்கள் பலா் கலந்துகொள்ளவுள்ளதோடு தமிழப பெயா் சூட்டியதற்காக தெரிவு செய்யபபட்டுள்ள பிள்ளைகளுக்கு பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளதாக சிலம்பகத் தாயக அமைப்பாளா்அறியத்தந்துள்ளாா்.(யே-70)

## ஸ்தாபகர்தினவிழா

(தனங்கிளப்பு)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் ஸ்தாபகா் தினவிழா நாளை வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு பாடசாலை அதிபா் இ.கயிலைநாதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தென்மராட்சிக் கல்விப் பணிப்பாளா் வ.செல்வராசா கலந்துகொள்ளவுள்ளாா். நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக்கழகப் பேராசியா் சபா ஜெயராசாவும், கல்லூரிச் சஞ்சிகையை உதவிக்கல்விப் பணிப்பாளா் கே.ஆா்.டேவிட் வெளியிட்டு வைக்கவுள்ளாா். (தி-37)

## அடிக்கல் நாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

இலங்கை சத்திய பாபா சேவா நிலையத்தினால் அமைக்கப்படவுள்ள மனித மேம்பாட்டுக் கல்லூரிக்கான புதிய கட்டட அடிக்கல் நாட்டுவிழா நேற்று முன்தினம் மானிப்பாயில் இடம்பெற்றது.

இலங்கை சத்தியசாயி பாபா நிலையத்தின் வட பிராந்திய இணைப்புக்குழுவின் இணைப்பாளா் ஆா்.வசந்த சேனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், நிலையத்தின் ஆலோசகரும் முன்னாள் யாழமாவட்ட அரசாங்க அதிபருமான செ.சிவஞானம் இதற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தாா். (தி-16)

## இலட்சார்ச்சனை பெருவிழா

(தொல்புரம்)

சுழிபுரம் வீரபத்திர சுவாமி உடனுறை ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலய இலட்சாா்ச்சனைப் பெருவிழா எதிா்வரும் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (யே-70)

## ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச சபையின் நவீன மீன் சந்தைக் கட்டடப் பாவிப் பின்பின்னா் எஞ்சிய பொருட்களும், நெல்லியடி பழைய சந்தையில் இருந்து கழற்றப்பட்ட கட்டடப் பொருட்களும் எதிா்வரும் 9ஆம் திகதி காலை 9.30மணிக்கு நெல்லியடி பழைய உப-அலுவலக வளவில் வைத்து ஏலத்திற்கு விடப்படவுள்ளது.

அலுவலக நேரத்தில் குறித்த பொருட்களைப் பாா்வையிடலாம். இது தொடா்பான விபரங்களுக்கு பிரதேச சபையுடன் தொடா்பு கொளளுமாறு கரவெட்டி பிரதேச சபையின் செயலாளா் சி.பசுபதி கேட்டுள்ளாா்.

(தி-18)

## சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் முறைசாரக் கல்விப் பயிற்சி நெறிகளை மேற்கொண்டு இதுவரை சான்றிதழ்களை பெறாத மாணவா்களுக்கு எதிா்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணி தெடக்கம் 5மணிவரை வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்தில் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. (தி)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யூனியன் கல்லூரி வளாகத்தில அமைந்துள்ள புவேனஸ்வரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை நடைபெறவுள்ளது. (தி)

## கூடைப்பந்தாட்ட பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கனிஷ்ட கூடைப்பந்தாட்டப் போட்டிக்கான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால், 21வயதிற்குட்பட்ட கூடைப்பந்தாட்ட வீரா்களை இன்று புதன்கிழமை மாலை 5மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத் திடலில் கூடுமாறு யாழ்.மாவடட கூடைப்பந்தாட்டச் சம்மேளனம் அறிவித்துள்ளது. (யே)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பௌா்ணமி தினத்தில் நடத்திவரும் அகத்தியா் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணமும் நாளை வியாழக்கிழமை காலை 6.00மணிக்கு வண்ணாா் பண்ணை குளங்கரை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (யே)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தால் முறைசாராப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கணனி தட்டச்சு, மின்னிணைப்பு, சாரதி, மேசன், ஆங்கிலக் கல்வி போன்ற கற்கை நெறிகளை மேற்கொள்ள விரும்புவோா் எதிா்வரும் 10ஆம் திகதிக்கு முன்னா் கல்விப் பணிப்பாளா், யாழ்.கல்வி வலய அலுவலகம், செம்மணி வீதி நல்லூா் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளா் அறிவித்துள்ளாா். (யே-36)

## நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீசத்தியசாயி பாபாவின் 80ஆவது அவதாரத் திருநாளை முன்னிட்டு தெய்வீகத் தேன்துளிகள் நூல் வெளியீட்டு விழா நாளை நண்பகல் 12.00 மணிக்கு திருநெல்வேலியில் உள்ள பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் நடைபெறவுள்ளது. (தி)

## மீள் ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

சிவசக்தி சனசமூக நிலைய படிப்பக மீள் ஆரம்பவிழா நாளை வியாழக்கிழமை காலை 8.05 மணிக்கு சனசமுக நிலையத் தலைவா் த.ஜெயானந்தன் தலைமையில் திருநெல்வேலியில் உள்ள அதன் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

(தி)

## திருகோணமலையில் டெங்கு அபாயம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் டெங்குகக்காய்ச்சல் தீவிரமாகப் பரவிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை நகரையும் அதனை அண்டிய பகுதிகளிலும் இந் நோய்த்தாக்கத்தினால் பெருமளவானோா் பாதிக்கப்பட்டுள்ளனா்.

இந்நோய் பரவும் அபாயமுள்ள பிரதேசங்களில் விழிப்புணா்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அததுடன், இந்நோயைக்கட்டுப்படுத்த மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது. (தி-4,60)

# முஸ்லிம் இரண்டாம் தரப்பாக எதிராக குரல் கொடுப்போம்

### அம்பாறையில் அமைச்சர் ஹக்கீம் ஆவேசம்

கொழும்பு)

முஸ்லிம் மக்களை இரண்டாம் தரப்பிரஜைகளாக கணிக்கும் சக்திகளுக்கு எதிராக முஸ்லிம் மக்கள் குரல் கொடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளாா்

சம்மாந்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவா் இவ்வாறு தெரிவித்தாா்.

அங்கு தொடா்ந்து பேசிய அமைச்சா் ஹக்கீம் முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்காது செயல்படும் எந்தவொரு கட்சி என்றாலும் நாம் அதனை எதிா்ப்போம். அது ஐக்கியதேசிய முன்னணி என்றாலும் கூட நாம் தயங்கமாட்டோம்.


அம்பாறை மாவட்ட உளளூா் ஆட்சித் தோ்தலை நடத்தி அம் மாவட்ட மக்களின் உரிமைகளை வழங்குமாறு கோரிவருகிறோம்.

ஆனால் இம் மாவட்டத்திற்கான தோ்தலை நடத்தக்கூடாது எனவும், நடத்தினால் அதனை எதிா்ப்போம் எனவும் மிரட்டி விடுகின்றனா்.

இவா்களின் தாளத்துக்கு அரசாங்கத்தின் சில கட்சிகள் ஒத்து ஊதுகின்றன.

அத்துடன் கிழக்கு மாகாணம் முழுவதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அதனால் முஸ்லிம் மக்கள் குறித்த எந்தவொரு முடிவையும் விடுதலைப்புலிகளைக் கேட்டே எடுக்கவேண்டும் என தமிழ் கூட்டமைப்பினா் கூறுகின்றனா்.

முஸ்லிம் மக்களின் தாயக



பூமியாக அம்பாறை மாவட்டத்தை அங்கீகரிக்க அனைத்து பள்ளி வாசல்கள் சம்மேளனமும் தீா்மானித்துள்ளது எனவும் அவா் மேலும் தெரிவித்தாா்.(தி-63)

# இராணுவ பிரசன்னத்தில் குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்வு சாத்தியமற்றது

(யாழ்ப்பாணம்)

இராணுவ பிரசன்னத்தில் இயல்பு வாழ்வு சாத்தியமற்றது. இவ்வாறு மலேசியாவின் தேசிய ஆசிரியா் பணியாளா் சங்கத்தின் முன்னாள் பொதுச் செயலாளரும், சா்வதேச கல்வியகத்தின் தற்போதைய நிபுணத்துவ ஆலோசகருமான எ.ராஜகுரு நேற்று முன்தினம் இலங்கைத் தமிழ் ஆசிரியா் சங்கத்தலைமையகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் தெரிவித்தாா். யாழ். மாவட்ட ஆசிரிய சங்கத்தலைவா் கணேசமூா்த்தியின் தலைமையில் நடைபெறற மேற்படி கலந்துரையாடலில்,

தமிழா் ஆசிரியா் சங்கப்பிரதிநிதிகள் பத்திரிகையாளா்கள் எனப் பலா் கலந்துகொண்டனா். வடக்கு-கிழக்கு பிரதேசத்தில் தமிழா்கள் கல்வி ரீதியாக எவ்வாறு பின் தள்ளப்பட்டுள்ளாா்கள் என் பதும் உயா் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் பல பாடசாலைகள் இராணுவ நெருக்குவாரங்களுக் குள் இருப்பது தொடா்பாகவும் தமிழ் மாணவா்கள் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலைகள் அற்றுப்போவதும் எடுத்துக் கூறப்பட்டது.

வடக்கு-கிழக்கில் 8000ஆசிரிய வெற்றிடங்கள் நிலவுகின்றன. அதேவேளை பிற மாவட்டங்களில 14ஆயிரம் ஆசிரியா்கள் மேலதிகமாக உள்ளனா். இந்நிலைமை வடக்கு-கிழக்கு மாணவா்களின் கல்வி நிலையைப் பெரிதும் பாதிதத்துள்ளது. இராணுவ நெருக்குவாரம் விலகி தமிழ் மாணவா்கள் இயல்பான சூழ்நிலையில் கல்வி கற்கக்கூடிய நிலைமைகள் உருவாகவும் வடக்கு-கிழக்கு இடைக்கால சபை உருவாக்கப்பட்டு தமிழீழ விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்படவேண்டிய நிலைமைகளை உருவாக்குவதற்குரிய ஒழுங்குகளைச் செய்து உதவவேண்டும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

மலேசியாவில் உள்ள அனைத்து சமூகத்தவரும் சம்பளம் உட்பட அனைத்திலும் சம அந்தஸ்துடன் வசிக்கின்றனா். அங்கும் தமிழா்கள் நல்ல நல்ல தொழில்களில் ஈடுபடுகின்றனா். அந்நாட்டு அரசியல் நிலைமை அதற்கு ஒத்துப் போகக் கூடியதாக உள்ளது. பல்கலைக்கழகத் தெரிவிலும் இன விகிதாசார முறையில் நடைபெறுவதனையும் சுட்டிக்காட்டினா்.

யாழ.மாவடடம் உட்பட ஏனைய தமிழ்ப் பிரதேசங்களின் கல்வி நிலைமைகள் கவலை அளிக்கிறது. இவ் நிலைமை விரைவில் நீங்க வேண்டும்.

யாழ்.மாவட்டம் பூராகவும் இராணுவக் காவலரண்கள் இராணு வீரா்கள் நடமாடுவதனால் தமிழ் மக்கள் இயல்பாக வாழும் சூழல் ஏறபடாததோடு மாணவா்கள் கல்வி கற்கக்கூடிய சாதகமான நிலை உருவாகாது. இங்குள்ள பாடசாலைகளினதும் மாணவா்களின் கல்வி அபிவிருத்திக்கும் என்னாலான சில உதவிகளைச் செய்யமுடியும்.

இங்குள்ள நிலைமைகளை சா்வதேச அரங்கில் எடுத்துரைப்பதாகக் கூறிய அவா், ஆசிரியா் பற் றாக்குறை எனபது நாட்டுக்கு நாடு நிலவும் பிரச்சினை எனவும் கூறினாா்.

(யே-3)

# பறவைக்காய்ச்சல் நோயினால் முட்டைக்கொள்வனவில் வீழ்ச்சி

(கொழும்பு)

ஆசிய நாடுகளில் பரவி வருகின்ற பறவைக்காய்ச்சல் நோய் காரணமாக இலங்கையில் கோழி, கோழி முட்டை என்பனவற்றின் கொள்வனவில் 15வீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை கோழிப் பண்ணையாளா் சங்கத் தலைவா் கலாநிதி டி.டி.வணசிங்க தெரிவித்தாா்.

கடந்த வாரம் தொடக்கம் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்தும மற்றும் சில தெற்காசிய நாடுகளில் இருந்தும் கோழி மற்றும் முட்டை ஆகியவற்றின் இறக்குமதிக்கு அரசு தடைவிதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இலங்கையின் மிகப் பெரிய கோழி சாா்ந்த உணவுப்பொருள் விற்பனையாளா்களின் புறக்கோட்டை மையம் 90 வீதம் விற்பனை வீழ்ச்சியைக் கண்டிருப்பதாகவும் அரசாங்கம் பாரிய கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற கொணடு வருவதாகவும் விற்பனைக்கு வைக்கப்படும கோழிகள பாதுகாப்பானவையா என்பதை அவதானித்து வருவதாகவும் தெரிவித்தாா்.

தாய்லாந்து நாட்டை மிக மோசமாகப் பாதித்துள்ள புதிய பறவைக்காய்ச்சல் நோய் இதுவரை இந்தியா, இலங்கை மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் தொற்றியிருப்பதறகான சான்றிதழ்களும் கண்டறியப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.(யே)

# 50 ஆயிரம் இராணுவத்தினர் இது வரை தப்பியோட்டம்

### இராணுவ தலைமையகம் அறிவிப்பு

(களுத்துறை)

இராணுவ சேவையில் இருந்து சுமாா் 50 ஆயிரம் வீரா்கள் இற்றை வரை தப்பி ஓடியிருப்பதாக இராணுவத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு தப்பி ஓடியவா்களுள் ஆரம்பப்பயிற்சிகளை மாத்திரம் நிறைவு செய்துள்ள வீரா்கள், சட்டரீதியாக தம்மைச் சேவையில் இருந்து விலக்கிக் கொள்ளலாம். இதற்கு இம் மாதம 9ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரையான சலுகைக்கால அவகாசத்தை இலங்கை இராணுவ தலைமையகம் வழங்கியுள்ளது.

இதன்படி, தம்மை விலக்கிக் கொள்ள விரும்புவோா் களுத்துறையில் உள்ள அவா்களது செயலகத்துடன் தொடா்பு கொள்ளலாம்.

இதைவிட, தம்மை தொடா்ந்தும் சேவையில் இணைத்துக் கொள்ளவிரும்புவோரும் தம் பதிவுகளை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதே வேளை நாட்டில் இடம் பெறும் பல்வேறு குற்றச் செயல்களுக்கும இராணுவ சேவையில் இருந்து தப்பி ஓடியோரே காரணம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சுட்டிக் காட்டியி ருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

(தி-04,13)

# ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் சிறுபான்மையினருக்கு என்ன செய்தது?

## முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அமைப்பாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பேரினவாத அரசியல் கட்சிகள் ஆட்சியில் இருக்கும்வரை சிறுபான்மையினத்தவர்களுக்கு விமோசனம் இல்லை என்பதை சகல தமிழ், முஸ்லிம், மலையக கட்சிகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆடசிப் பீடமேறும்வரை ஆசை வார்த்தைகளைப் பேசிவரும் பேரினவாத கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றியதும், சிறுபான்மையினத்தவர்களின் உரிமைகளை நசுக்கி விடுகின்றார்கள். அவர்களை தமது அடிமைகளாகவும் எண்ணுகின்றார்கள்.

இதனால் பேரினவாதக் கட்சிகளின் இத்தகைய குள்ளத்தனமான செயற்பாட்டிற்கு சிறுபான்மையினத்தவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளும் முற்றுப்புள்ளி வைக்க முன்வரவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், புத்தளம் நகரின் முன்னாள நகர பிதாவுமான கே.ஏ.பாயிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் "விடியும்வேளை" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே பாயிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

மாறி மாறி ஆட்சியில் அமரும் பேரினவாத அரசியல் கட்சிகள் தொடர்ந்து சிறுபான்மை இனத்தவரை ஏமாற்றி வருகிறார்கள். இதனால், நாம் தொடர்ந்தும் சிங்கள சமூகத்திற்கு அடிமைகளாக இருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் இருந்தால் என்ன? ஐக்கியதேசிய முன்னணியின் ஆட்சியில் இருந்தால் என்ன? ஏன் ஜே.வி.பி.கூட தற்போது ஆட்சிப் பீடமேற ஆசைப்படுகின்றது. அவ்வாறு ஜே.வி.பி.யினா கூட ஆட்சிக்கு வநதாலும், எமக்கு ஒரு விடிவையோ விமோசனத்தையோ பெற்றுத்தர மாட்டார்கள்.

சமாதானம் என்ற போர்வையில் சர்வதேச நாடுகளிடம் நிதியைப் பெற்று சிங்கள சமூகம் வாழும் பிரதேசங்களை அபிவிருத்திசெய்யும் தமது இராணுவ பலத்தை பலப்படுத்திக்கொண்டு வரும் ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கம் சிறுபான்மை இனத்தவர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் என்னதான் செய்திருக்கின்றது?

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுத்ததா? அல்லது அவர்களுக்கு ஏதாவது உதவிகளை வழங்கி புனர்வாழ்வளித்ததா? எதுவும் செய்யவில்லை.

இவை எல்லாவற்றிற்கும் முன்னதாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தி சிறுபான்மையினத்தவர்களுக்கு நியாயமானதொரு தீர்வை வழங்க நடவடிக்கை எடுத்ததா?

சர்வதேச நாடுகளிடம் நிதியுதவியைப் பெற்றுக் கொள்வதற்காக சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த அரசு, தற்போது அதனை இடைநடுவில் விட்டுவிட்டு மௌனம் சாதிக்கின்றது.

அதுமட்டுமன்றி அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே மீணடும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படும்போது அதில் முஸ்லிம் சமூகம் மூன்றாம் தரப்பாகக் கலந்துகொள்ள வேண்டும் என எமது கட்சி விடுத்த கோரிக்கையைக் கூட அலட்சியப்படுத்திக கொண்டிருக்கிறது.

இவ்விடயத்தில் ஐக்கிய தேசிய முன்னணியை மட்டும் நான் குற்றஞ் சாட்டவில்லை பொதுஜன ஐக்கியமுன்னணி மற்றும் ஜே.வி. பி., சிகல உறுமய போன்ற பல பேரினவாத கட்சிகளும் சிறு பான்மை இனத்தவர்களின் நலன்களை நசுக்கிவருகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்த சமயம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வே அரசின் உதவியுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்த போது "முஸ்லிம் சமூகம் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு உள்வாங்கபபடவேண்டும்" என எமது கட்சி கோரிவந்தது.

அப்போது ஜனாதிபதியும் எமது கடசியின் கோரிக்கையை அலட்சியம செய்தார். முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தனனிடம் கூறுமாறும், தான் அதுபற்றி விடுதலைப் புலிகளுடன் பேசுவதாகவும் கூறினார். அதனை நாம் ஏற்க மறுத்தபோது முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதானால்,தாம் பேச்சுவார்த்தையில் இருந்து விலகப போவதாகக் கூறி மிரட்டினார்.

இது அவ்வாறிருக்க, தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் ஜே.வி.பி. கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டுமெனக் கூறிவருகிறதே தவிர முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுன்வரவில்லை. எனவே இனியும் நாம் பேரினவாத அரசியல் கட்சிகளை நம்பி எமது தன்மானத்தை இழக்கத் தயாரில்லை.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்குத் தாவு காண ஏதாவது ஒரு ஆக்கபூர்வமான நடவடிகக்கையில் இறங்க வேண்டும். அதற்கு சகல சிறுபான்மை இனக் கட்சிகளும் முன்வரவேண்டும்.

குறிப்பாக தேசிய ஐக்கிய முனனணி, முஸ்லிம்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, எமது கட்சியுடன் முரண்பாடுகளை வளர்த்துகொள்ளாது கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

எமது கட்சியை விமர்சித்துக் கொண்டு எமது நடவடிக்கைகளுககுத் தடையாக தேசிய ஐக்கியமுனனணி இருக்குமானால் முஸ்லிம் மக்களே பாதிக்கப்படுவார்கள் என்பதை அக்கட்சிக்கு கூறிவைக்க விரும்புகின்றேன்.(தி-60,10)

# வசீம் அக்ரம் மீதான வழக்குத் தள்ளுபடி

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவரும் உலகின் மிகச் சிறந்த பந்துவீச்சாளர்களில் ஒருவருமான வசீம் அக்ரம் முன்னாள் இநதிய கிரிக்கெற் அணியின் வேகபபந்து வீச்சாளர்களுக்கு பந்துவீச்சுப் பயிற்சிகளை வழங்குவதற்கு தடைவிதிக்குமாறு கோரி பாகிஸ்தான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கினை நீதிபதி தள்ளுபடி செய்தார்.

கடந்த ஆண்டின் இறுதியில் இந்தியாவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த வசீம் இந்திய கிரிக்கெற் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்குப் பந்துவீச்சுப் பயிற்சிகளை வழங்க விருப்பம் தெரிவித்திருந்தாக செய்திகள் வெளியிடப்பட்டன. இதற்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த வழக்கொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட லாகூர் நீதிமன்ற நீதிபதி அன்பர் குன்றையில் வசீம் அக்ரம் பாகிஸ்தானின் தேசிய வீரர் என்றாலும், அவருக்குத் தேவையில்லாமல் அழுத்தஙகளைக் கொடுக்கக்கூடாது என்று தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

மேலும இதுபோன்ற அடிப்படை அற்ற குற்றச்சாட்டுக்களை நீதிமன்றில் தாக்கல் செய்யக்கூடாது என்றும் வழக்கு தொடுத்தவரை எச்சரித்ததோடு, அவருக்கு அபராதத் தொகையும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்திருந்தார்.

வசீம் அக்கரம் ஒருநாள் சாவதேச போடடிகளில் உலகில் அதிக விக்கெற்றுக்களைக் கைப்பற்றிய வீரராகத் திகழ்கின்றார். இவர் ஒரு நாள் சர்வதேச போட்டிகளில் 502 விக்கெற்றுக்களையும், டெஸ்ட்போட்டிகளில் 414விக்கெற்றுக்களையும் கைப்பற்றியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (யே-68)

# ஆஸி.அணியுடனான தோல்வி இந்திய அணியை பாதிக்காது

அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் முக்கோண ஒருநாள் சர்வதேச கிரிகெற் போட்டியில் அவுஸதிரேலிய அணிக்கெதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கடைசி லீக் போட்டியில் இந்திய அணியினா அடைந்த தோல்வ்யானது அவுஸ்திரேலியாவுடன் நடைபெறவுள்ள இந்தப் போட்டித்தொடரின் இறுதி ஆட்டங்களில் இந்திய




அணியைப் பாதிக்காது என இந்தியக் கிரிக்கெற் அணியின் தலைவா சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணியுடனான கடைசி லீக் போட்டியில் அடைந்த தோல்வியின் பின்னர் ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு பேசியிருந்த இந்திய அணித்தலைவர் சௌரவ் கங்குலி, இந்தத் தோல்வியானது இந்திய அணி வீரர்களை எந்தவிதத்திலும் பாதிக்காது.

மேலும் இறுதிப் போட்டிகள் நடைபெறவுள்ள ஆடுகளங்கள் இந்திய அணி வீரர்களுக்கு ஏற்ற வகையில் அமையும் எனவும் அவா நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.அத்துடன் இறுதிப் போட்டிகளில் இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் உட்பட அனைவரும் சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாடுவார்கள்.

இதேவேளை, இந்திய, அவுஸ்திரேலிய அணிக்கிடையில் நடைபெறவுள்ள 3போட்டிகள் கொண்ட இவ் இறுதிப்போட்டிகளின் முதலாவது போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி மெல்போர்னிலும், 2வது போட்டி எதிர்வரும் 8ஆம் திகதி சிட்னியிலும் நடைபெறவுள்ளன. இந்த இரு போட்டிகளிலும் ஒரே அணியே வெற்றிபெறும் எனில் எதிர்வரும் 10ஆம் திகதியன்று பிறிஸ்பேனில் நடைபெறவுள்ள 3 ஆவது இறுதிப்போட்டி கைவிடப்படும் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (யே-68)



அவுஸ்திரேலியாவின் பேர்த்தில் கடந்த திங்கட்கிழமை பயிற்சியின் இடையே குளிர்பானம் அருந்தி இளைப்பாறுகிறார் இந்திய வீரர் வீரேந்திரா சேவாக்

# தென்னாபிரிக்க அணியை மேற்கிந்தியத்தீவுகள் வென்றது

தென்னாபிரிக்கா மற்றும் மேற்கிநதியத் தீவுகள் அணிகளுக்கிடையில் செஞ்சூரியனில் நடைபெற்ற 4ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 7விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வெற்றிகொண்டுள்ளது. இந்த வெற்றியை அடுத்து 5போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச போட்டித்தொடரின் இறுதி ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெறுமானால் தொடரை 2:2 என்ற சமநிலையில் நிறைவு செய்ய முடியும். 4 வது ஒருநாள் சர்வதேச போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர் முடிவில், 4விக்கெற்றை மட்டுமே இழந்து 297ஓட்டங்களைப் பெற்றுக கொண்டது. தென்னாபிரிக்க துடுப்பாட்டத்தில் ஜக்கலிஸ் ஆட்டமிழக்காமல 95ஓட்டங்களையும், லான்ஸ் குழுஸ்னா ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும் இயன்ஸ்மித் 46 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் மேற்கிந்திய அணி வீரர்கள் கிறிஸ் கெயில், ரவீரம் போல் மற்றும் சர்வான் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றுக்களைக் கைப்பற்றினர்.

பின்னர் பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 45ஓவர் முடிவிலேயே 3 விக்கெற்றுக்களை மட்டுமே இழந்து 300ஓட்டங்களைப்பெற்று இப் போட்டியின் தொடரில் சிறப்பான வெற்றி ஒன்றைப் பெற்றுக் கொண்டது. மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்டத்தில் சிவ்நாரின் சந்தர் போல் 92ஓட்டஙகளையும், ராம் நரேஸ் சர்வான் ஆட்டமிழக்காமல் 77ஓட்டங்களையும் அணித்தலைவர் பிறைன்லாரா ஆட்டமிழக்காமல் 59ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தனர்.

தெனணாபிரிக்க அணியின் பந்துவீச்சில் ஜோன் பொலக் 2விக்கெற்றுக்களையும், ஜக்கலிஸ் ஒரு விக்கெற்றையும் கைப்பற்றினர். இதனை அடுத்து தொடரின் 5ஆவதும் இறுதியுமான இன்று நடைபெறவுள்ள போட்டி மிகப் பரபரப்பான போட்டியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (யே-68)

## சிறு விளம்பரம்

### விற்பனை

சகல விதமான T.V களுக்கு சிறந்த முறையில் அன்ரனா பொருத்திக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற், அன்ரனா உதிரிப பாகங்கள் பெற்றுக் கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்: நியூ சிற்றி றேடேர்ஸ்,135 கஸ்தூரியார் வீதி (குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 222-3226 (C/7313)

### ஆங்கில வகுப்புகள்

*Spoken English, English Literature and Englis Language. Grade 9,10,11* மேற் குறித்த வகுப்புகள் *Jaffna Technical Institute* இலுப்பையடிச் சந்தி *367* நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் *06.02.2004* ஆரம்பமாகிறது.

ஆசிரியர்: தெய்வதவபாலன்

விபரங்களுக்கு பதிவாளர் J.T.I (C/7342)

### மணப் பெண் தேவை

உத்தியோகத்தர் ஒருவருக்கு மறுதாரம் செய்வதற்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணப் பெண் தேவை. வயது 30-40 சீதனம் எதிர்பாக்கப்படமாட்டாது. விளம்பர இல- 345, c/o வலம்புரி இல-15 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம். (8196)


### கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை கோட்டையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.55 மணிக்கு இடம்பெறவுள்ளது. (தி-18)

# ஆளுமைக் கோளாறுகள் காணப்படும் போது மனநோய் ஏற்பட வாய்ப்புகள் உண்டா?

ஒருவனின் பண்பு நலன்கள்- அவன் நடந்து கொள்கின்ற விதம- பிரச்சினைகளை அணுகும் பாங்கு- என்பதனை ஆளுமை என்போம். சூழ்நிலைகளை ஆளுகின்ற தன்மை எனலாம். பிறப்பு, வளர்க்கப்படும் விதம், கல்வி, நண்பர்கள், சமுதாயம் எனப் பல்வேறு காரணிகள் ஆளுமையை உருவாக்குகின்றன. இவ்வாறு உருவாகும் ஆளுமையின் அடிப்படையில் சில மனநோய்கள் உருவாகின்றன. எனவேதான் பண்பட்ட ஆளுமையைப் பெற முயற்சி செய்யவேண்டும்.

### பரனாய்டு ஆளுமை

இவ்வகையினர் மிக்க உணர்ச்சியும், வளைந்து கொடுக்காத தன்மையையும் கொண்டிருப்பர். சந்தேகம், பொறமை மிகுந்து இருக்கும். இவர்கள் பிறரோடு இணக்கமான உறவைக் கொள்ளமாட்டார்கள். தங்களுடைய தவறுகளுக்ும் பிறரைக் குற்றம் சொல்லும் வகையினர்.

### ஸ்கிசாய்டு ஆளுமை

அகமுகத்தினராக, பிறரோடு பழகக் கூச்சமுடையவர்களாக இருப்பார்கள். குழந்தைப் பருவம் முதற்கொண்டு இந்த ஆளுமை வளரத் தொடங்கிவிடுகிறது. பகற்கனவில் சஞ்சரிக்கும் இவர்கள், தங்களுடைய விரோதம், கோபம் ஆகியவற்றைக்கூட வெளிக்காட்ட முடியாதவர்களாக இருப்பர். பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கி எதிலும ஈடுபாடு அற்றவர்களாக இருப்பார்கள்.

### சைக்லோதைமிக் ஆளுமை

உணர்ச்சிகளில் ஏற்றத் தாழ்வுகள் மிகுந்து காணப்படும். சிலசமயம் மகிழ்ச்சியாகவும், சில வேளைகளில் சோகமே உருவாகவும் காட்சி அளிப்பார்கள். தங்களின் மனநிலைக்கு ஏற்ப சமூக நிகழ்ச்சிகளில் பங்கேற்பார்கள்.

### எண்ணப் பீடிகை ஆளுமை

சட்டதிட்டம், எதிலும் ஒரு வரன முறை, ஒழுங்கு என எதிர்பார்க்கும் மனப்போக்கினை உடையவர்கள். தங்களின் எதிர்பார்ப்புக்கும், வரை முறைகளுக்கும் பிறர் இணங்கவேண்டும் என்று எண்ணுபவர்கள். இந்நிலை நீடிக்குமாயின் அலைக்கழிக்கும் எண்ணங்களாலும், திரும்பத் திரும்ப ஒரே செயலைச் செய்யத்தூண்டும் மனத் தளர்ச்சிக்கும் ஆளாகிவிடுவார்கள்.

### ஹிஸ்டீரியா ஆளுமை

உணர்ச்சி மிகக் கொண்டவர்கள். சிறிய விஷயத்தையும் பெரிதுபடுத்தி நாடகமாக்கும் நடிகர்கள். இவர்கள் மனவெழுச்சியில் பக்குவமின்மை, குழந்தைத்தனம், முதிர்ச்சியின்மை, தன்னலம்மிக்க குணம், பிறர்தன்னை மட்டுமே கவனிக்க வேண்டும் என்று எண்ணிச் செயல்படும் மனோபாவம் இவர்களிடம் காணப்படும்.

### வளர்ச்சியற்ற ஆளுமை

பறரோடு இணங்கிப் போகமுடியாதவர்கள். அறிவு, மனவெழுச்சி, சமூக உறவு ஆகியவற்றில் போதுமான வளர்ச்சியையும், நிறைவையும் பெறமுடியாதவர்கள். இவர்களால் வாழ்க்கையில் முன்னேற முடியாது. இத்தகைய ஆளுமையை பிச்சைக்காரர்கள், குற்றவாளிகள் ஆகியோரிடம் காணலாம்.

### சோர்வுடைய ஆளுமை

எளிதில், உற்சாகம் குன்றிச் சோர்வை அடையும் தன்மையினர். தங்களுக்கு வலிமை இல்லை எனக் கூறிக்கொண்டு சிறிய விஷயங்களைக் கண்டும் அதிர்ச்சி அடைவார்கள். வாழ்வைச் சுவைத்து அனுபவிக்க இயலாதவர்கள்.

### கொதித்தெழும் ஆளுமை

எதற்கெடுத்தாலும் ஆத்திரம் அடைபவர்கள். குரோதம், வன்செயல் இவற்றில் ஈடுபாடு அதிகமுடையவர்கள். வலிப்பு நோய்க்குரிய ஆளுமை என இதனைக் குறிப்பிட்டாலும், மூளையில் யாதொரு மாற்றமுமில்லை.

### நத்தை வகை ஆளுமை

பிறர் மீது விரோதம், தாக்க வேணடும் என்கின்ற வெறுப்புணர்வு, பகை இருப்பினும், தன்னுடைய மன உள்ளிருப்புகளை வெளிக்காட்டாமல் அதே சமயம் அமைதியான முறையில் வெறுப்பை வெளிககாட்டும்வகையினர். தங்களுடைய எண்ணத்தை ஊமைபோல இருந்தே நிறைவேற்றிக் கொள்வார்கள்.

### முன் ஜாக்கிரதை ஆளுமை

பாதுகாப்பின்மை, சந்தேகம், முழுமையின்மை, அரைவேக்காட்டுத்தனம் என்கின்ற மனப்போக்கு நிறைந்திருப்பதால், அளவுக்கு மீறிய அகமபாவம், பிடிவாதம், எச்சரிககை போன்ற குணங்கள் இவர்களிடம் காணப்படும்.

**டாக்டர் ஜி.ராஜமோகன்**

இவ்வகை ஆளுமைப் பண்புகள் அளவுக்கு அதிகமாயின் ஆளுமைக் கோளாறுகள் ஏற்படும். இத்தகைய ஆளுமையின் அடிப்படையில் மனவியாதிகள் பரிமளிககும், இணக்கமான எல்லோரும் விரும்புகின்ற, இயல்பான ஆளுமையைப் பெற முயற்சி செய்ய வேண்டும். □

# செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. மானிய ஆணைக்குழுவுக்கு கடிதம்

(மன்னார்)

மருத்துவ பீடத்துக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பாக மன்னார் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுத் தலைவருக்கு இரண்டாவது கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

முதலாவது கடிதம் கடந்த டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவுக்கு அனுப்பிவைக்கபட்டது. அதற்குரிய பதில் கிடைக்காததனை அடுத்தே இவ் இரண்டாவது கடிதமும் அனுப்பப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில்,

மன்னார் மாவட்டத்திலிருந்து விஞ்ஞானப் பிரிவில் 5ஆம் இடத்தைப் பெற்ற மாணவியின் இடத்தில் மன்னார் மாவட்ட பாடசாலைகளில் பயிலாது வேறு பாடசாலையில் பயின்ற மாணவர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டு, அவர் மன்னார் மாவட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படத் தகுதியற்றவர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளரினால் இது சம்பந்தமாக வரையப்பட்ட கடிதத்தின் படி, மன்னார் மாவட்டத்தில் உ/த விஞ்ஞான பிரிவு உள்ள மன்/முருங்கன் மகா வித்தியாலயம், மன்/புனித ஆனாள் ம.ம.வித்தியாலயம், வங்காலை, மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரி, மன்/சித்திவிநாயகர் இந்து தேசியக் கல்லூரி, மன்/ பத்திமா ம.ம. வித்தியாலயம் பேசாலை ஆகிய பாடசாலைகளில் மேற்படி மாணவர் கல்வி பயிலவில்லையென்பது அந்தந்தப் பாடசாலை அதிபர்களது கடிதங்களுடன் நிருபிக்கப்பட்டது. இவற்றுடன் இம் மாணவி கல்வி கற்ற புனித சவேரியார் பெண்கள் தேசியக் கல்லூரியும் அடங்கும்.

இந்நிலையில் மிகவும் பின்தங்கிய மாவட்டத்தில் பெரும் சிரமத்துடன் கல்விகற்று 5 ஆம் இடத்தைப் பெற்ற மாணவியை நீக்கிவிட்டு அவரது இடத்தில் மன்னார் மாவட்ட அடிப்படையில் தெரிவாவதற்கு எவ்வித தகுதியும் அற்ற ஒருவருக்கு இடம் கொடுத்திருப்பது பெரும் அநீதியான, மனிதாபிமானமற்ற செயலாகும்.

இப்படிப்பட்ட நிகழ்வு கடந்த சில வருடங்களாகத் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதும், இது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினராகிய எனது கடிதங்களை யிட்டு கவனம் செலுத்தப்படாது கடிதம் கிடைத்ததென்ற பதில் கூட பல்கலைக்கழக ஆணைக் குழுவிடமிருந்து இல்லாதிருப்பதும் மக்கள் மத்தியில் பல தப்பபிப் பிராயங்களை அறிஞர்கள் பலர் கொண்ட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் மேல் உருவாக்கி இருப்பது என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்விடயம் சம்பந்தமான உண்மை நிலையை நன்கு பரிசீலித்து நீதி வழங்கப்படல் வேண்டுமென எதிர்பார்ப்பதுடன் இனி வரும் வருடங்களிலும் மேற்படி நிகழ்வுகள் நடைபெறாமல் இருப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றேன் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# முதியோர் புனர்வாழ்வுக்கு புதிய திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள முதியோருக்குப் புனர்வாழ்வு அளிக்கும் வகையிலான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சமூக சேவைகள் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

இது விடயம் தொடர்பாக கைதடி முதியோர் இல்லத்தின் அத்தியட்சர் கே.வி.சிவனேசன் கருத்துத் தெரிவிக்கையில்,

கைதடி முதியோர் இல்லத்திலுள்ளவர்களின் தொழில் திறன், வினைத்திறன் மற்றும் அனுவம் போன்றவற்றின் அடிப்படையில், அவர்களுக்குரிய தொழில் வாய்ப்பை வழஙகுவதற்கும், அவர்களின் நேரத்தை மிகவும் பயனுள்ள வகையில் செலவிடுவதற்குமே அவர்களுக்கு தொழில் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

அந்த வகையில், இங்குள்ள முதியோர்களின் வினைத்திறனுக்கு ஏற்ப தையல் மற்றும் கயிறு திரித்தல் போன்ற பல தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகளை சமூக சேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது எனக் குறிப்பிட்டுள்ளார். (தி-6)

### அடிக்கல் நாட்டு விழா

(இணுவில்)

ஏழாலை மத்தி கண்ணகை அம்பாள் ஆலய மணிமண்டப அடிக்கல் நாட்டுவிழா நாளை வியாழக் கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்து கலாசார விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் பிரதம விருநதினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைக்கவுள்ளார். (யே-122)

### அபிவிருத்திப் பணிகளைப் பார்வையிட

# நிக்கொட் நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் குழு யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

நிக்கொட் நிறுவனத்தின் உயர் மட்ட அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மேற்பார்வையிடுவதற்காக இங்கு வருகை தரவுள்ள அக் குழுவில், நிக்கொட் நிறுவனத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் எஸ். நவரட்ணராசா, ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனி, திட்ட நிபுணர் எஸ். திருச்செல்வம் மற்றும் நெதர்லாந்து தூதுவராலயத்தின் முதலாவது செயலாளர் ஜோன் குசுக்கன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் வரும் இக்குழுவினர் அன்றைய தினம் மருதங்கேணிக்கு விஜயம் செய்து வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளிலுள்ள 18 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவுக்கென 3 கோடி ரூபா நிதியுதவியையும் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில், நிக்கொட் நிறுவனப் பணிப்பாளர் ரி.இலங்கா நேசன் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (தி-16)

# பெரும்பான்மையினருக்கே சுதந்திரதினம் சிறுபான்மை மக்களுக்கு அல்ல

## சுரேஷ் பிறேமச்சந்திரன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினம் பெரும்பான்மை மக்களுக்கே அன்றி, சிறுபான்மை இனத்தவர்களுக்கு அல்ல. நாடெங்கிலும் இன்று கொண்டாடப்படவுள்ள சுதந்திர தினத்தை பகிஷ்கரிக்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் அணியின் தலைவர் சுரேஸ் பிறேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் மேற்படி தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்,

இலங்கையின் சுதந்திர தினமென்பது, சிங்கள மக்களின் சுதந்திர தினமாக இருந்து வத்ததேயன்றி தமிழ் மக்களின் அல்லது ஏனைய சிறுபான்மை மக்களின் சுதந்திரதினமாக எனறும் இருத்ததில்லை.

1972 ஆம் ஆண்டு இலங்கையை ஓர் குடியரசாகப் பிரகடனப்படுத்திய போது சிறீமாவோ பண்டாரநாயக்காவினால் கொண்டுவரப்பட்ட அரசியல் சாசனமும், அதன் பின்னர் 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கொண்டுவந்த அரசியல் சாசனமும் தமிழ்த் தேசியத்துக்கு எதிரான வகையில், அவர்களை இந்த நாட்டின் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கும் விதத்திலேயே உருவாக்கப்பட்டது. இந்த அரசியல சாசனங்களுக்கும் தமிழர் பிரதிநிதிகளுக்கும் இதை உருவாக்குவதில் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை என்பது வெளிப்படையான உண்மை. இந்த அடிப்படையில் சுதந்திரதினமென்பது தமிழர்களுக்கல்ல என்பதும் அதனை நாங்கள் பகிஷ்கரித்து வநதோம் என்பதும் தான் வரலாறு.

இந்த ஒரு தலைப்பட்சமான அரசியல் சாசனங்களை மாற்றி இந்த நாடடில் உள்ள சகல இன மக்களும் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும், தனித்துவத்துடனும் வாழக்கூடிய வகையில் ஓர் புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலம தமிழ் பேசும் மக்கள் தமது சொந்த தாயகத்தில் சுயாட்சியைக் கொண்டவர்களாக, தம்மைத் தாமே ஆளக்கூடியவர்களாக இருக்க வேண்டும். ஓர் புதிய சமஷ்டி அரசியல் முறை அமைவிலேயே இது சாத்தியமாகும் என்ற அடிப்படையில், தமிழர் தரப்பின் சார்பாக விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இருநத சமயத்தில், சிங்களத் தலைமை மீண்டும் இப் பேச்சுவார்த்தையை குழப்பி நாட்டை மீண்டும் ஓர் யுத்த நெருக்கடிக்குள் தள்ளி வருகின்றனர்.

சிங்களத் தலைமைகள் தமது அதிகாரப் போட்டியை தீர்த்து புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்க வேண்டுமென்ற சர்வதேச அழுத்தங்களும் கூட எடுபட்டதாகத தோன்றவில்லை. இனப்பிரச்சினைத் தீர்வு என்பதும், பேச்சுவார்த்தை என்பதும், அமைதி, சமாதானம் என்பதும் இன்னும் தூரத்துக் கனவுகளாகவே இருந்து வருகின்றன. எனவே இதற்கான எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டியதும் எமது கடமையாகும். (தி)

கேடறியாக் கெட்டவிடத்தும்
வளங்குன்றா
நாடென்ப நாட்டின் தலை.
குறள்

வலம்புரி

# சுதந்திர தினம் யாருக்குரியது ?

இலங்கையின் 56-வது சுதந்திர தினம் இன்றாகும். ஒருநாடு சுதந்திரமடைந்ததெனில் அந்நாட்டில் வாழும் சகல இன மக்களும் அந்த சுதந்திரத்தை மகிழ்வோடு அனுஷ்டிக்க வேண்டும் அதுவே சுதந்திர தினத்தின் அர்த்த புஷ்டியான வெளிப்பாடாகும்.

ஆனால் இலங்கையின் சுதந்திரம் என்பது ஒரு குறித்த இனக் குழுமத்திற்கு மட்டுமே உரியதாகி விட்டது.

பெரும்பான்மை இனம் என்பதற்காக ஒரு நாட்டின் சுதந்திரம்-இறைமை-ஆட்சி இவையெல்லாம் அந்த இனத்திற்கே உரியது எனக் கருதுவது உண்மையான சுதந்திரத்தைக் குறித்து நிற்காது. மாறாக பெரும்பான்மையினரின் அத்தகையதொரு மனோ நிலை பெற்ற சுதந்திரத்திற்கு ஆபத்தைத் தருவதாகவே அமையும்.

இதுவே இலங்கைத்தீவில் நடந்து கொண்டிருக்கின்றது. பெரும்பான்மையினமான சிங்களவர்கள் பல்லின மக்கள் வாழும் இலங்கைத் திருநாடு தமக்கே உரித்துடையதெனக் கருதிக்கொள்கின்றனர்.

இதனால் இனங்களுக்கிடையே ஒற்றுமையில்லை, சமத்துவம் இல்லை. 1948களில் இலங்கை சுதந்திரமடைந்தது எனக் கூறப்பட்டபோதிலும் அது ஒரு வாய்ப்பேச்சாகவுள்ளதே தவிர, இலங்கைப் பிரஜைகள் அனைவரும் அச் சுதந்திரத்தை மனதால் ஏற்று அனுஷ்டித்ததாக இல்லை.

இந்நிலை கடந்த 56 வருடங்களாக நீடிக்கின்றது. இலங்கைத் திருநாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் இலங்கையின் சுதந்திர-தினத்தை ஏன் கொண்டாடவில்லை என்ற கேள்வி சிங்கள ஆட்சியாளர்களிடம் ஏற்பட்டிருக்குமாக இருந்தால்- அத்தகையதொரு கேள்விக்கு உரியபரிகாரம் தேடப்பட்டிருந்தால், பாரதத்தின் சுதந்திரத்தை அங்கு வாழும் பல்லின மக்கள் எவ்வாறு ஒற்றுமையாக, ஒருமுகப்பட்டு கொண்டாடுகிறார்களோ அதே போன்று இலங்கை மக்களும் தங்கள் திருநாட்டின் சுதந்திரத்தை ஒற்றுமையாக அனுஷ்டித்திருப்பார்கள்.

ஆனால் சிங்களப் பெரும்பான்மை இனம் அத்தகையதொரு சமத்துவ நிலையை ஏற்படுத்தவும் இல்லை-ஏற்படுத்த விரும்பவும் இல்லை. இதனால் தென்னிலங்கையில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டபோது சிங்களப் பேரினவாதத்தால் நசுக்கப்பட்ட தமிழினத்தின் இதயங்கள் வேகமாகத் துடித்தன.

சிங்கள இனத்தின் விலங்கை உடைத்தெறிய வேண்டும் என அவர்கள் சபதம் எடுத்தனர். அதன் விளைவாகவே கடந்த இருபது வருடங்களாக இன யுத்தம் நடந்தது.

தமிழ் மக்களும் சுதந்திர தினத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்ற சிந்தனையே இல்லாத சிங்கள ஆட்சியாளர்கள் சுதந்திர தினத்தையே கொண்டாட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டனர்.

இந்நிலைமை தற்போது சற்றுத் தணிந்திருந்தாலும் இத் தணிவு எதனால் ஏற்பட்டது. இதனை முழுமைப்படுத்த வேண்டுமானால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பது குறித்து ஒரு திடமான முடிவை ஆட்சியாளர்கள் எடுக்க வில்லை.

இதனால் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் இன்றைய சுதந்திர தினம் கறுப்புத் தினமாக-துக்க தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஒரு நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும் கூடி இது எங்கள் நாடு-எமது தேசம் என்று கொட்டி முழங்கி சுதந்திர தினத்தை என்று கொண் டாடுகிறார்களோ அன்றுதான் சுதந்திரம் மலரும். இந்நிலைமை இலங்கைக்குச் சாலவும் பொருத்துடையதாகும்.

ஆக, தமிழ் மக்களும் இலங்கையின் சுதந்திர தினத்தை என்று கொண்டாடுகின்றார்களோ அன்று தான் இலங்கைக்கு சுதந்திரம்-அங்குவாழும் அனைத்து இன மக்களுக்கும் சுதந்திரம்.

# சுதந்திர தினம் என்பது தமிழ் மக்களின் சாவுமணி!

## அபிவிருத்தி நல உரிமைகள் சங்கம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினம் எனபது சிறுபான்மை இனத்தவருக்கு கிடைத்த சாவுணி என்றே கூறவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்தி நல உரிமைச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில்,

சுதந்திரம் கிடைத்த பின்பு முதன் முதல், பாராளுமன்ற அமர்விலேயே, இலங்கை வாழ் இந்திய சமுதாயத்துக்கு கிடைத்த பிரஜா உரிமை, வாக்குரிமைகளை பறித்த முதல் அடி,

பின்பு குடியேற்றம் மூலமாக தமிழ் பிரதேசங்களை பறி முதலாக்கி, தமிழ் பேசும் இனத்தின் நிலப்பரப்புக்களை சூறையாடி தமிழ் மக்களின் குடியுரிமை நிலபுலத்துக்கு சாவு மணி அடித்தது.

அதன் பிறகு 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் மூலம் சிறுபான்மை மக்களின் குறிப்பாக, தமிழ் மக்களின் படிப்பு, தொழில்துறை உத்தியோக உயர்வுக்கு சாவுமணி அடித்தது.

தொடர்ச்சியாக, அரசியல் சட்டமூலங்கள் திருத்தப்படுவதாலும், அகற்றப்படுவதாலும், எம்மை அடிமைகளாக்கி, அற்பசொற்ப சலுகைகளுளள 29,13 ம் சரத்துக்களை அகற்றி எம்மை நட்டாற்றில் விட்டன.

1978 ல் பயங்கரவாத தடைச்சட்ட மூலம் எம்மை பயங்கரவாதிகளாக்கி, அடக்கி, ஒடுக்கி சிறையிலடைக்க எடுத்த முயற்சிகள் பல.

அதுமட்டுமா...1958,1961,1977,1983,1987 ஆம் ஆண்டுகளில் எம்மை எமது மண்ணில் வாழவிடாமல், நாட்டில் கலவரத்தை ஏற்படுத்தி, இந்நாட்டில் வாழும் தமிழர்களுக்கு உயிர், பொருள்,முதலீடுகள், பொருளாதாரம் அத்தனையும் பேரினவாதிகளால் அழிக்கப்பட்டன

இனத்துவேஷத்தை கக்கிக் கொண்டிருக்கும் ஜே.வி.பி.யும் தமிழ் பேசும் இனத்தை இன்றும் அடக்கி ஒடுக்கத் திட்டமிட்டு ஸ்ரீ.ல.சு.க சேர்ந்து நடத்தும் முதல் ஆண்டு சுதந்திர தினத்தை தன்மானம் உள்ள எந்த சிறுபான்மையினமும் கொண்டாடவோ , கொண்டாட்டங்களில் பங்கு பற்றவோ கூடாது.

நாம் சுதந்திரத்தைக் காணும் நாள் வெகுதூரத்தில் இல்லை.பேரினவாத கட்சிகள் சமாதான முன்னெடுப்புக்களை முன்னெடுத்து சமாதானப் பேச்சு மூலம் எமது சுயநிர்ணய உரிமையை தரவேண்டும். தவறினால் நாம் பிரிந்து சென்று சுதந்திரக் காற்றை சுவாசிப்பதை யாராலும் தடுக்க முடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

## அதிபர்களின் தகைமையை பரிசீலிக்க உத்தரவு

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களின் கல்வித் தகைமைகளை மீண்டும் பரிசீலிக்குமாறு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கல்வி அமைச்சின் மேலதிக செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய அதிபர்களின் கல்விச் சான்றிதழ்கள் விரைவில் சோதனை செய்யப்படவுள்ளன,

இதேவேளை, கல்வி நிர்வாக சேவையில் இணைந்திருக்கும் அதிகாரிகளின் தகைமைகளும் சோதிக்கபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தி-60,10)

## மண் அகழ்வை தடுக்க பொலிஸார் நடவடிக்கை

(வரணி)

தென்மராட்சிப் பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வுகளைத் தடுக்க தென்மராட்சிப் பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

வரணி, கச்சாய், பாலாவி போன்ற இடங்களில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெற்று வருவதாக தென்மராட்சிப் பொலிஸாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே பொலிஸார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன் வரணி, கொடிகாமம் போன்ற பகுதிகளில் மண் ஏற்றிக் கொண்டு வரும் வாகனங்களை பொலிஸார் மறித்து சோதனைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (தி-16)

## ரயில்வே ஊழியர்கள் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

ரயில்வே தொழிற்சங்கக் கூட்டமைப்பிற்கும் - அரசாங்கத்திற்கும் இடையே நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுக்கள் இணக்கப்பாடு எதுவும் இன்றி முடிவடைந்துள்ளது. ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முகமாகவே இப்பேச்சு வார்த்தை இடம் பெற்றது.

இதில் ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றியமைப்பது குறித்த வர்த்தமானி அறிவித்தலை இரதது்ச் செய்யுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாமையினாலேயே இச்சந்திப்பு இணக்கப்பாடுகளின்றி முடிவடைந்தது.

இதேவேளை ரயில்வே ஊழியர்களுக்குள்ள பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு தான் எந்த வேளையிலும் தயாராக இருப்பதாக ரயில்வே அதிகாரசபையின் தலைவர் ஹேமச்சந்திர மனதுங்க தெரிவித்துள்ளார்.

இப்பிரச்சினைகளுக்கு பேச்சுக்கள் மூலமே தீர்வுகாண முடியும் எனவும் ரயில்வே சேவையை வழமைக்கு கொண்டுவர முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-60,4)

ௐ திணசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என்றைக்கு ஆன்மீகம் தனது செல்வாக்கை இழந்து உலகாயதம் தலையெடுக்க ஆரம்பிக்கிறதோ, அன்று முதல் அந்த சமுதாயத்திற்கு அழிவும் ஆரம்பித்து விடுகிறது.

ஆன்மீகத்தில் மிகுந்த வலிமையும் ஆற்றலும் நிறைந்தவன் விரும்பினால் வாழ்க்கையில் மற்ற எல்லாத்துறைகளிலும் பேராற்றல் பொருந்தியவனாக விளங்க முடியும்.

சுவாமி விவேகானந்தர்

## குளங்களை புனரமைக்க உலகவங்கி நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களை புனரமைப்புதற்கு உலக வங்கி 8 கோடி ரூபா நிதியை வழங்கியுள்ளது.

நியாப் திட்டத்தின் ஊடாக குடாநாட்டிலுள்ள 40 குளங்களும் தடுப்பு அணைகளும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

அத்துடன் இந் நிதி உதவியின் கீழ் 12 பொதுக்கட்டடங்களும் அமைக்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட 30 கிராமங்களில் உள்ள மக்களுக்கு சுழற்சி முறையில் சுயதொழில் வாய்ப்புக்கும் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இத்திட்டங்களை விரைவாகச் செயற்படுத்தி இவ்வாண்டுக்குள்ளேயே அவற்றை பூர்த்தி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (தி-3)

## குடியமர அனுமதிக்கக்கோரி கொழும்புத்துறை மக்கள், செயலகம் முன்போராட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை, நெடுங்குளம் போன்ற பிரதேசங்களில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்கும்படி கோரி கொழும்புத்துறை பொது அமைப்புகளின் ஒன்றியம் யாழ். செயலகத்துக்கு முன்னால் சுதந்திரதினமான இன்று மறியல் போராட்டம் நடத்தவுள்ளது.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இப்பிரதேசத்தினுள் குடியிருப்பு நிலங்கள் மீளக் குடியமரத் தடைசெய்யப்பட்டுள்ளதால், சுமார் 150க்கும் அதிகமான குடும்பங்கள் இடம் பெயர்ந்து வாழுகின்றன.

இப்பகுதி மக்கள் மீள் குடியமர அனுமதிக்குமாறு கோரி சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பல தடவைகள் எடுத்துக் கூறியும் எதுவித பலனும் இல்லை என அவ்வமைப்புக் கவலை தெரிவித்துள்ளது. (தி-51)

## இந்தோனேசியா-இலங்கை விவசாய உடன்படிக்கை

(கொழும்பு)

விவசாயத்துறையை விருத்தி செய்வதற்கான உடன்படிக்கையொன்றில் இந்தோனேசியாவும் இலங்கையும் கைச் சாத்திட்டுள்ளன.

இவ்வுடன்படிக்கையில் விவசாய கால்நடை வளர்ப்பு அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்காவும் அந்நாட்டு விவசாயத்துறை அமைச்சரும் கைச்சாத்திட்டுள்ளனர்.விவசாய அபிவிருத்திக்கென தென்கிழக்காசிய நாடொன்று கைச்சாத்திட்ட முதலாவது உடன்படிக்கை இதுவாகும்.

இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் மூலம் விஞ்ஞானிகளுக்குப் பயிற்சியளித்தல், கிராமியத் திட்டங்களை அறிமுகம் செய்தல் இரு நாடுகளுக்குமிடையில் விவசாயம் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல் விவசாய உற்பத்தியினை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்றன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.(தி-63)

# அலிக் அலுவிகாரவுக்கு எதிராக கட்சி உறுப்பினர்கள் கருத்து

(கொழும்பு)

தனது மகன்மாரை உயர் பதவிகளில் அமர்த்துவதற்காகப் பெரும் பிரயத்தனத்துடன் செயற்பட்டு வருகிறார் எனக் கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள உள்ஞூராட்சி மாகாணசபை அமைச்சரும், மாத்தளை மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளருமான அலிக் அலுவிகார தனது கட்சி அமைப்பாளர் பதவியை இராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் மாத்தளை நகர சபை மண்டபத்தில் இடம்பெற்ற பேராளர் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பலரும் அங்கு வருகை தந்திருந்த அமைச்சர் அலுக் அலுவிகாரவை, குடும்ப அரசியல் நடத்துவதாகவும், அவர் தனது மகன்மாரை ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களின் உழைப்பைச் சாதகமாகப் பயன்படுத்தி உயர் பதவிகளில் அமர்த்தும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார் எனவும் குற்றம் சாட்டினார்.

இதையடுத்து அம் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் அலிக் அலுவிகாரவின் புதல்வர்களான மத்திய மாகாண முதலமைச்சர் வஸந்த அலுவிகார மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார ஆகியோர் கூட்டத்தின் இடைநடுவிலிருந்து வெளிநடப்புச் செய்தனர் அத்துடன் மாத்தளை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தனது அமைப்பாளர் பதவியை உடனடியாக இராஜினாமாச் செய்யப் போவதாகவும் அமைச்சர் அலுக் அலுவிகார அறிவித்துள்ளார். (ந)

## சித்திரத் தேருக்கு அச்சு ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திற்குப் புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான அச்சு ஏற்றும் வைபவம் நாளை வியாழக்கிழமை செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாலயத்திற்கான சித்திரத் தேர் அமைப்பதற்கான செயற்பாடுகள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனால் கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தமிழர்...

யாழ்.குடாநாட்டில் உள்ள வர்த்தக நிறுவனங்கள்யாவும் பூட்டப்பட்ட நிலையில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்படவுள்ளன. இன்று இடம் பெறவுள்ள சுதந்திர தினத்தை முன்னிட்டு வலி.வடக்கு தென்மராட்சி ஆகிய பகுதிகளில் மீளக் குடியமர அனுமதிக்குமாறு அவ்வப் பிரதேச செயலகங்களுக்கு முன்பாக இன்று முதல் சாகும்வரையிலான உண்ணா விரதப் போராட்டங்களையும் ஆரம்பிக்கவுள்ளனர். (ம)


### சிற்றூழியர் தேவை

எமது அலுவலகத்தில் இரவில் கடமையாற்றுவதற்கு சிற்றூழியர் தேவை. விருப்புடையோர்

05-02-2004 நாளை பிற்பகல 3.30மணிக்கு நேரில் வரவும்.

வலம்புரி நிர்வாக உத்தியோகத்தர்


## வான்...

தில் பொலிஸார் மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் தன்னைத் தொடர்புபடுத்தி வவுனியாவில் உள்ள பொலிஸார் 6 பேர் கொலைமிரட்டல் விடுத்துள்ளதாகவும் இதனால் கொழும்பு-யாழ்ப்பாணம் பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-3)

## எந்த நேரத்திலும்..

கவும் எந்தநேரத்திலும் பாராளுமன்றம் கலைக்கப்படலாம் என்றும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இக் கருத்துக்களின் அடிப்படையில் அரசியல் ரீதியான மாற்றங்களுக்கு அமைவாக பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (இ)

## ஐ.நா.மனித...

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளருக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இந்த அழைப்பை ஏற்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இம்மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவருடைய இந்த விஜயத்தின் போது அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நேரில் சென்று பார்வையிடவுள்ளதுடன் பாதிக்கப்பட்ட பொதுமக்களையும் சந்தித்து பேசுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# யாழ்.பல்கலைக் கழக ஊழியர்கள் 2வது நாளாகவும் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

இப் போராட்டத்தில் பல்கலைக் கழகப் பாதுகாப்புப் பிரிவினர், நீர் வழங்கல் சேவைப் பிரிவினர் தவிர்ந்த ஏனைய ஊழியர்கள், பதாகைகளைத் தாங்கியவாறு, பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஊழியர்களின் இப்போராட்டத்தினால், பல்கலைக் கழகப் பணிகள் முடக்கமடைந்தன.

தமது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றாத வரை போராட்டம் தொடரும் என்று ஊழியர் தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வரும் வகையில் இன்று பிற்பகல் 2.00மணிக்கு பல்கலைக் கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் அவர்களுக்கும், ஊழியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் விடுதலைப் புலிகளின் மத்தியஸ்தத்துடன் சந்திப் பொன்று இடம்பெறவுள்ளது. (இ-19)

# யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர் இடைநிறுத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்புத்தலைமை உத்தியோகத்தர் பல்கலைக்கழகப் பதிவாளரால் நேற்று இடைநிறுத்தப்பட்டார்.

பாதுகாப்பு ஊழியர்கள் கடமைகளைச் சரிவரச் செய்யவில்லை என்று குறிப்பிட்டே பாதுகாப்புத் தீலைமை உத்தியோகத்தர் இடைநிறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

இதேவேளை பாதுகாப்பு ஊழியர்கள் மற்றும் நீர்வழங்கல் சேவைப் பிரிவு ஊழியர்கள் தவிர்ந்த ஏனைய ஊழியர்கள் பல்கலைக்கழகத்தில் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே. (இ-19)

## 33 ஈழத்தமிழ் அகதிகள் நெடுந்தீவுக்கு வந்தனர்

தமிழகம் இராமேஸ்வரத்திலிருந்து 33 ஈழத்தமிழ் அகதிகள் நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர். இந்திய இழுவைப் படகுகளில் 4000 ரூபாவை ஒவ்வொருவரும் கொடுத்து 33 அகதிகளும் நெடுந்தீவு மேற்கு கரையை வந்தடைந்தனர்.

12 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேரில் 4 குடும்பங்கள் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களாவார். 8 குடும்பங்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாவார். (த)

## சுதந்திர சதுக்கத்தில் இன்று

(கொழும்பு)

இலங்கையின் 56வது சுதந்திர தினம், இன்று தலைநகர் கொழும்பில் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளது. சுதந்திர சதுக்கத்தில் காலை 8.00மணிக்கு தேசியக் கொடிஏற்றலுடன் ஆரம்பமாகி நண்பகல் 12.30மணி வரை நிகழ்வுகள் நடைபெறும். (இ)


### தவறிவிட்டது

இலகடி, வலந்தலை, காரைநகரைச் சேர்ந்த வடிவேலு பூமகள் என்பவருடைய தே.அ.அ(இல 808182238V), விசேட அடையாள அட்டை, (வட்டு. வடக்கு, சித்தன்கேணி) பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன யாழ்ப்பாணத்தை அண்டிய பகுதிகளில் தவறி விட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் வயூமகள், உடையார் விடுதி, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலிக்கு உடனடியாக அனுப்பி வைக்கவும். (T.P 222-2142) (8232)



ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5392
Fax: 222 3214
E.mail: smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர்
T.P: 0602212472
(த-7341)


# போராளியின் வித்துடல் விதைப்பு

(யாழ்ப்பாணம்)

சுகவீனம் காரணமாக சாவடைந்த மாவீரர் 2ம் லெப். யாழின் பனின் (முத்தையா புஸ்பராசா- துறைமுக வீதி,அராலி தெற்கு) வித்துடல் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில், பாண்ட் அணிவகுப்பு மரியாதையுடன் விதைக்கப்பட்டது.

முன்னதாக அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் வித்துடல் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கு அராலி மத்தி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் எஸ்.ரூபன் தலைமையில் வீர வணக்கக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி கலைவிழி, வலிகாமம் மேற்கு கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் க.குலசிங்கம் ஆகியோர் உரையாற்றினர். (இ)


### நெஞ்சுருகும் நினைவில் 2ம் ஆண்டு

தாயின் மடியில் 29 – 07 – 1972

இறைவன் அடியில் 04 – 02 – 2002



அமரர்

நாகன் கோபாலகிருஸ்ணன் (ரஞ்சன்)

புன் முறுவல் பூத்த முகம் எம் உருவம் காணாது
எங்கண்ணா சென்றது - நீ
சென்ற நாள் சென்று ஆண்டு இரண்டு ஆனாலும்
உன் உருவம் எம் மனதில் நிழலாடி நிற்குதண்ணா
எம் இதயத்தின் துடிப்பின் இறுதிவரைக்கும் - உன்
நினைவிலே நாம் என்றும் வாழ்ந்திடுவோம் அண்ணா
நின் ஆத்மா சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திப்போம்
ஓம்சாந்தி சாந்தி சாந்தி

அராலி மேற்கு
வட்டுக்கோட்டை

குடும்பத்தினர்

(8229)



### திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம்

2004ம் ஆண்டு வருடாந்த மகோற்சவம். எதிர்வரும் 05-02-2004 வியாழக்கிழமை கொடியேற்றம் பகல் 11.00மணியளவில் நடைபெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| 10ம் திருவிழா மஞ்சம் | - | 14ம் திகதி- சனிக்கிழமை |
| 12ம் திருவிழா கைலாயவாகனம் | - | 16ம் திகதி- திங்கட்கிழமை |
| 14ம் திருவிழா சப்பறம் | - | 18ம் திகதி- புதன்கிழமை |
| 15ம் திருவிழா தேர் | - | 19ம் திகதி- வியாழக்கிழமை |
| 16ம் திருவிழா தீர்த்தம் | - | 20ம் திகதி- வெள்ளிக்கிழமை |
| 21ம் திகதி சனிக்கிழமை பகல் | - | அன்னதானம் |
| மாலை | - | தண்டிகை உற்சவம் |
| 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை | - | வைரவர் உற்சவம் |

பிரசுர அன்பளிப்பு

கனகா பத்திரிகை விற்பனை நிலையம்

இல.6-பலாலி வீதி திருநெல்வேலிச் சந்தி

(சீ-7267)



திங்கள், வியாழன் தோறும்
உங்கள் வலம்புரியில்

### விவாத அரங்கு

கருத்துச் சங்கமம் - 02

விடயம் :

தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்களை - சமூகப் பெறுமானங்களை பாதுகாப்பதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் தவறிவிட்டது - தவறவில்லை

உங்கள் வாதப் பிரதிவாதங்களை விரைவாக அனுப்பி வையுங்கள்

விவாத அரங்கிற்கு மேற்படி விடயத்தை முன்வைத்தவர்
வித்தகன்
யாழ்ப்பாணம்

வாசகர்களே நீங்களும் விவாத அரங்கிற்கு விடயப் பொருளை முன்வைக்க முடியும்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.